ஓம்

பரப்பிரம்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(All Rights Reserved.)


| தொகுதி | காளயுக்தி௵ ஆவணி௴ ௧௳ | பகுதி |
|---|---|---|
| 4 | 1918-௵ ஆகஸ்டு௴ 16௳ | 2 |


## கடவுள் வணக்கம்

உன்னிலையு மென்னிலையு மொருநிலை யெனக்கிடந்
துளரிடு மவத்தையாகி
உருவுதான் காட்டாத வாணவமு மொளிகண்
டொளிக்கின்ற விருளென்னவே
தன்னிலைமை காட்டாதொருக்கவிரு வினையினாற்
றுவுசுக துக்கவேலை
தட்டழிய முற்றுமில் லாமாயை யதனாற்
றடித்தநில பேதமான
முன்னிலை யொழிந்திட வகண்டிதா காரமாய்
மூதறிவு மேலுதிப்ப
முன்பின்னொடு கீழ்மே னடுப்பக்க மென்னுமன்
முற்றுமா னந்தநிறைவே
என்னிலைமை யாய்நின்ற வியல்புகூ றருள்வடிவ
மெந்நாளும் வாழிவாழி
இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
எங்குநிறை கின்றபொருளே.

---

வாழ்வனைத்து மயக்கமெனத் தேர்ந்தேன் றேர்ந்த
வாறேநா னப்பாலோர் வழி பாராமல்
தாழ்வுபெற்றிங் கிருந்தேனீ தென்ன மாயந்
தடையுற்றான் மேற்கதியுந் தடைய தாமே
ஊழ்வலியோ வல்லதுன்றன் றிருக்கூத் தோவிங்
கொருவழியேன் மேற்குறையோ வுணர்த்தா யின்னம்
பாழவதிப் படிவெனக்கு முடியா தெல்லாம்
படைத்தளித்துத் துடைக்கவல்ல பரிசி னானே.

# ஆனந்தபோதினி

காளயுக்திஸு ஆவணிமீ 1௳

## நான்

சகோதர சகோதரிகளே! உலகில் யாவரும் நான், என்னை, என்னுடையது என்று பலகாலும் கூறிக்கொண்டிருப்பதை நாம் காண்கின்றோம். நாமும் அப்படியே கூறிக்கொள்கின்றோம். நான் எனது என்ற இந்த இரண்டு உணர்ச்சிகளே நமது இன்னல்களுக்கெல்லாம் காரணமா யிருக்கின்றன. உண்மையில் இந்த நான் என்பது எது என்று பார்ப்போம்.

நீயார் என்று ஒருவனைக்கேட்டால் "நான் பிராம்மணன் என் பெயர் கிருஷ்ணையர் என்கிறான். இதே கேள்விக்குப் பலர் இதேவிதமாய் ஜாதிப்பட்டத்தோடு வேறு வேறு இடுகுறிப் பெயரையோ காரணப் பெயரையோ சேர்த்துக் கூறுவார்கள். இருக்கட்டும்—அதுவரையிலாவது நான் என்றது நிலைக்கிறதா பார்ப்போம். என்னகாரணத்தால் பிராம்மணன் என்று பார்த்தால் சதாசாரம் ஞானம் இவைகளை யுடையவனா யிருத்தலால் என்றே முடியும். மற்ற கண்ணுக்குப் புலப்படும் எதனாலும் அல்ல. ஏனெனில் பிராம்மணன் ஒத்தைக்குடுமி, பூணூல், மீசையின்மை இவைகளையுடையவனென்றால், குயவன், தட்டான் இன்னும் பலர் ஒத்தைக்குடுமியும் மீசையின்மையும் உடையவர்களே. பிராம்மணர்களிலேயே சில வகுப்பார் மீசைவைத்துக்கொண் டிருக்கிறார்கள். பூணூலோ யாவர்க்கு முரியதே. தக்க விதிப்படி ஆசாரத்தோடு எப்போதும் நடப்பவர்கள் எப்போதுமே யணிந்துகொள்கிறார்கள். மற்றபேர் ஆகமவிதிப்படி ஏதேனும் கிரியைகளைச் செய்யுங்கால் அப்போதுமட்டும் அணிந்துகொண்டு ஆசாரத்தோடு அக்கிரியையைச் செய்துவிட்டு பிறகு எடுத்து விடுகிறார்கள். சிலர் அணிந்துகொண்டே ஆசாரம்தவறியே நடக்கிறார்கள். எப்போதுமே ஆசாரம் தவறி நடப்பதால் இதுகாறும் கிரியை செய்யும் போதுமட்டுமே பூணூல் அணிந்துகொண்டிருந்த ஜாதியா

சிலர் கலியின் கொடுமையால் இப்போது பிராம்மணரைப்போல் எப்போதுமே யணிந்துகொள்ளத் தலைப்பட்டுவிட்டார்கள். அந்தோ, இதனால்நாமும் பிராம்மணராய்விடலாம் என்று கருதுகிறார்களாக்கும். இதனால் தீமையேயன்றி நன்மை யொருபோது முண்டாகாது. இனி யிதனையெல்லாம் ஆளைக்குறிப்பிக்கக்கூடாவிட்டால் நான் என்பதினால் எப்படி குறிப்பிப்பது?

இப்போது நாமாக வைத்துக்கொண்ட பெயர்கள் யாவற்றையும் நீக்கிவிடுவோம். பிறகு கண்ணுக்குப் புலப்படும் வெறும் ஸ்தூலதேகங்களே யிருக்கின்றன. ஒவ்வொரு தேகமும் நான் நான் என்று கூறிக்கொள்கின்றது. இத்தேகங்களில் ஒன்றுக்கொன்று அமைப்பில் வித்தியாசமேயில்லை.

தேகத்தை நானென்றால் தேகம் என்பது பலவஸ்துக்கள் சேர்ந்ததாயிருக்கிறது. எவ்வாறெனின். கண்கள், செவிகள், நாசி, வாய், நாக்கு, மண்டை, அதற்குள் மூளை, முதலியவை சேர்ந்த சிரசு, கைகள், கழுத்து, மார்பு, வயிறு, கால்கள், இன்னும் இவற்றிற்குள் இருக்கும் பல உருப்புகள், இவையாவும் சேர்ந்த மொத்த உருவத்திற்கே தேகம் என்கிறோம். இவைகளில் தனியே எதையும் தேகம் என்பதில்லை; எதுவும் தேகமாகாது.

வண்டியை யெடுத்துக்கொள்வோம். சக்கரங்கள், இரிசு, மையக்கட்டை, பார், நுகத்தடி, ஏர்கால், சவாரி, கடையாணிகள் முதலிய யாவையும் சேர்ந்ததையே வண்டியென்கிறோம். தனித் தனியாய்ப் பார்க்கும்போது, சக்கரத்தை வண்டி எனலாமா? ஏர் காலை வண்டியெனலாமா? இரிசை வண்டி யெனலாமா?

இல்லை; ஒன்றையும் கூறலாகாது. ஏனெனில் எதுவும் வண்டியாகாது. இதில் திருட்டாந்தமாய் இன்னொருவிஷயம் நாம் அங்கீகரிக்கத்தக்கதுளது. அதாவது:—நாம் ஒரு வண்டியில் ஏறி வந்தபோது ஒரு வேஷ்டி காணாமற்போயிற்று. நாம் அந்த வேஷ்டியைத் தேடப்போய், மேற்கண்டபடி வண்டியின் ஒவ்வொரு பாகத்திலும் பார்த்தோம். வேஷ்டி யகப்படவில்லை. எப்போது ஒவ்வொரு பாகத்திலும் வேஷ்டியில்லைபோ, வண்டியில் வேஷ்டியில்லையென்று கூறத்தடையென்னை. ஒன்றுமேயில்லை.

இதுபோல் நான் என்பது தேகம் என்று கருதலாமெனில், தவறாகவே முடிகிறது. எவ்வாறெனின்:—

கையை நான் என்றால், கையில்லாத ஒருவனும் நான் என்கிறான்; இதுமட்டுமல்ல, கையுடைய ஒருவன் கையை யிழந்துவிட்டால் பின்பும் நான் என்கிறானேயன்றி, நான் வெட்டுண்டு போய்விட்டேன் என்பதில்லை. கையிவனல்ல என்பதற்கு இவன் வாயாலேயே ருசு ஏற்பட்டுவிடுகிறது. எவ்வாறெனில், என்கை வெட்டுண்டுபோயிற்று என்கிறான். எனதுகை என்னுடையகை என்பது ஆறாம்வேற்றுமைப் பிறிதின் கிழமையாதலால் எப்போதும் இரண்டு பொருள்கள் என்று பிரித்துக்காட்டுகிறது. தான் ஒன்று, தனக்கு உரித்தாகக்கூறும் தன்னின் வேறாகிய பொருள் ஒன்று. தன்னின் வேறாகிய அப்பொருள் ஒருக்காலும் தானாகாது. அது தற்சமயம் தன்னுடையதா யிருக்கிறது. பிறகு தன் உரிமையினின்றும் பிரிந்துபோய்விடவும் கூடும். ஆகையால் ஒருபோதும் அது தானாகாது. இவ்வாற்றால் கையிவனல்ல இவனுக்குச் சொந்தமான தொன்று. இவன் அதையறிந்து, தன் இஷ்டப்படி அதுசெய்யுமாறு அதை ஆள்கிறான். கை ஜடப்பொருள்; அது இவனை யுணராது.

இவ்வாறே மற்ற அவயவங்களும் இவனாகமாட்டா. தூலதேகம்போல சூக்குமதேகக் கருவிகளும் இவனாகமாட்டா. ஸ்தூலதேகக் கருவிகள்போலவே அவற்றையும், "என்மனம், என் புத்திக்குப் படவில்லை. என்சித்தப்படி நடப்பேன்" என்கிறான். அவற்றையும் அவற்றின் தொழில்களையும் அறிகிறான். அவற்றையெல்லாம் ஆட்டிவைக்கும் கர்த்தாவாயிருக்கிறான். வேண்டும்போது அவற்றோடு கூடித்தொழிற் செய்கிறான். வேண்டாதபோது அவற்றின் சம்பந்தத்தை நீக்கிக்கொண்டு தனியாய்விடுகிறான். ஆகையால் தேகத்திலுள்ள எந்த அங்கமும் இவனல்ல. ஆதலால் வண்டியில் வேஷ்டியில்லாததுபோல, முழுதேகமும் இவனல்ல. மற்றபடி யார் அந்த நான் எனில், நான் தேகமல்ல. தேகத்திற்கு வேறாகவே கண்ணுக்குப் புலப்படாமல் தேகத்திற்குள் இருக்கும் ஒருவஸ்து என்று கூறலாம்.

இப்போது தேகங்கள் என்றமட்டில் எதிலும் வித்தியாசமின்றி எல்லாவற்றிலும் சமமாகவே யிருக்கின்றன. வினையின்படி கைகால் கண்முதலிய அங்கங்களில் ஒவ்வொருதேகத்தில் ஒன்றிரண்டு குறைவாயிருப்பினும், பிறகு இடையிற் குறைவு நேரினும் அவைகளின் உற்பத்தியானது ஒரேவிதமான பொருட்களின்

சேர்க்கையாலேயே. சர்மம், உதிரம், மாமிசம், எலும்பு, நரம்பு, மூளை, சுக்கிலம் என்கிற இந்த சத்த தாதுக்களாலேயே எல்லாத் தேகங்களும் படைக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு ஒரு வித்தியாசமுமில்லாத தேகங்களில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு நான் இருந்துகொண்டிருக்கிறது. தேகம் முழுமையும் நான் அல்லவாயினும் பிராணன் கூட நான் அல்லவோ? எனின்,

அல்ல. பிராணன் என்பது உஸ்வாச நிஸ்வாசம் செய்வதும் தேகத்தில் நடக்கவேண்டிய கருவிகளின் தொழில்களை நடக்கச் செய்து தேகத்தை அழிந்துபோகாவண்ணம் காப்பாற்றிக்கொண்டிருப்பதுமாகிய ஒரு தத்துவமேயன்றி வேறல்ல. அதுவும் ஜடமே. அதுவும் நான் என்பதை யுணராது. நித்திரையில் அது இயங்கிக்கொண்டிருந்தாலும் எதையுமுணராது. நான் என்பதே "என் பிராணன் போனாலும் நான் இதைச் செய்யேன்" என்கிறது. இதனாலேயே பிராணன் நான் அல்லவென்றுணரலாம்.

இந்த நான் என்ன செய்துகொண்டிருக்கிறதெனில், அதன் தொழிலை மூன்றாய்ப் பிறித்துக்கூறலாம். 1. சாக்கிரம், 2. சொப்பனம், 3. சுழுத்தி. இந்த மூன்றிற்கும் அவஸ்தைகள் என்னும் பெயர். இம்மூன்றையும் மாறி மாறி யனுபவிக்கிறதே இந்த 'நான்' என்பதற்குத் தொழில்.

1. சாக்கிரம்:—சாக்கிரத்தில் இந்த நான் என்பது லலாடமத்தியில் நின்று ஜடக்கருவிகளாகிய தன் பரிவாரங்கள் 35-உடனும் கூடி மாயா சம்பந்தத்தால் எனது எனது என்று கருதியிருக்கும் உலக விவகாரங்களைச் செய்கிறது.

35—கருவிகளாவன.

| | |
|---|---|
| ஞானேந்திரியங்கள்—மெய், வாய், கண், மூக்கு, செவி ஆக (சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிங்குவை, ஆக்ராணம்.) | 5 |
| கன்மேந்திரியங்கள்—வாக்கு, பாதம், பாணி, பாயுரு, ஆண்குறி அல்லது பெண்குறி | 5 |
| சத்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம், கந்தம் இவற்றை யுணர்தலாகிய ஞானேந்திரியங்களின் தொழில்கள் | 5 |
| வசனம், தானம், கமனம், விசர்ஜனம், ஆனந்தம் ஆகிய கன்மேந்திரியங்களின் தொழில்கள் | 5 |

அந்தக்கரணங்கள்—மனம், புத்தி, சித்தம், அகங்காரம்,
உள்ளம் ஆக 5

வாயுக்கள்—பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்செயன் ஆக 10

ஆக 35

இந்தத் தத்துவங்களின் உற்பத்தி, தொழில் முதலிய விவசங்களை ஞானஜீவவாதக் கட்டளை முதலிய நூல்களில் கண்டுகொள்ளலாம்.

2. சோப்பனம்:—சொப்பனுவஸ்தையில் இந்த நான் கண்டத்தில் நின்று, மேற்படி 35 கருவிகளில் வாயுக்கள் 10-ம் நீங்கலாக மீதி 25-கருவிகளோடும் முன் பின் சாக்கிரத்தில் நினைத்தவை கண்டவை, கேட்டவை, அநுபவித்தவைகளை (தின்ற தீனியையே மாடு மறுபடி அசைபோடுவதுபோல்) மறுபடி யநுபவிக்கிறது.

3. சுழுத்தி:—சுழுத்தியவஸ்தையில் நான் என்பது பிராணன், சித்தம் இவற்றோடுமட்டும் கூடி, மற்ற கருவிகளின் கூட்டில்லாததால், நிம்மதியடைந்து மாயையோடு கூடியிருப்பதால் தன்னையுமறந்து சுகமாய் இளைப்பாறுகிறது.

இந்த எல்லா "நான்" களுக்கும் இதேதான் தொழில். இதில் எவ்வித வித்தியாசமுமில்லை.

தேகங்களெல்லாம் ஒரேபொருளிலிருந்து உற்பத்தியானதால் அவைகளுக்குள் வித்தியாசமில்லையென்று முன்பு கூறினோம். இப்போது இந்த "நான்" களெல்லாம் உருவமில்லாமல், ஒவ்வொரு தேகத்தில் ஒவ்வொன்றாய்க் குடியிருந்துகொண்டு ஒரேவிதத் தொழிலைச் செய்துகொண்டிருக்கின்றன என்றோம்.

இனி இந்த "நான்" என்பவற்றிற்குள் வித்தியாசமுண்டா, இவற்றின் உற்பத்திஸ்தானமெது ? இவற்றின் தற்காலநிலைமை சுகுசுவத்மானதா ? இல்லையேல் எந்தநிலைமை சாசுவதமானது ? அதாவது இவற்றின் சாசுவதமான சொரூபம் எது? என்பவற்றை அடுத்த சஞ்சிகையில் கூறுவாம். (தொடரும்)

ஓம் தத்ஸத்.

---

## ஒரு அறிவிப்பு.

ஆனந்தபோதினி பத்திரிகாசிரியர் அவர்களுக்கு,

ஐயா, சென்ற ஜூலை மாதம் 16-ந் தேதி வெளிவந்த தங்கள் ஆனந்தபோதினியை எனது நண்பர் ஒருவரிடமிருந்து வாப்பெற்று பார்வை யிட்டேன் மேற்படி ஆனந்தபோதினியின் 32-வது பக்கம் S. V. பழனியப்பன் போர்ட்பாடசாலை, மொடக்குறிச்சி, ஈரோட் தாலூகா எனக் கைச்சாத்திட்ட ஒரு சிறுபரால் மாணவர்பக்கத்தில் நல்லொழுக்கம் என்னும் விஷயம் எழுதப்பட்டிருக்கிறது. மேற்படி விஷயம் யாழ்ப்பாண நல்லூர் ஸ்ரீமான் ஆறுமுக நாவலர் அவர்களால் இயற்றப்பட்ட நான்காம்பாடத்திலுள்ள விஷயத்திற்குச் சரியான நகல் என்பதை யாவரும் நன்கறியலாம். இதுவும் ஒரு புதுமையே ஒருவரால் எழுதப்பட்ட விஷயத்தை தாம் எழுதியதாகக் கருதி பத்திரிகையில் பிரசுரிக்கச்செய்வது மிகவும் வெட்கமான காரியமென்பதை அந்த நண்பர் ஒரு சிறிதும் உணரவில்லைபோலும். அப்படித் தம்பெயர் பத்திரிகையில் வெளிவர வேண்டுமென விருப்பங்கொண்டால் தமது சொந்த அபிப்பிராயத்தைக்கொண்டு எழுதவேண்டும் அல்லது இன்ன புத்தகத்தின் மொழிபெயர்ப் பென்றுவது காட்டவேண்டும். அப்படிக்கின்றி நானும் விஷயதானம் செய்தேனென்ற வீண் பெருமையை வெளிக்குக்காட்டுவது.

> கானமயிலாடக் கண்டிருந்தவான்கோழி
> தானுமதுவாகப் பாவித்துத்—தானுந்தன்
> பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
> கல்லாதான் கற்ற கவி

என்பதை யொக்கும். ஆதலின் நண்பாவர்கள் இனிமேலாவது இத்துர்வழக்கத்தை விடுத்து போதகாசிரியர் போதித்த நல்லுபதேசத்தை நாடி நலம்பெறுவாராக.

N. வேணுகோபால புத்தகசாலை, கோயமுத்தூர்.

குறிப்பு:—இரண்டொருவர் ஏற்கனவே இந்த இழிந்த குற்றத்தைச்செய்து பத்திரிகை வாயிலாய் அறிவுறுத்தப்பட்டிருந்தும், நமது சஞ்சிகைக்கு அகௌரவத்தை யுண்டாக்கக் கருதி இன்னும் செய்து வருகிறார்கள்; இனியும் செய்வார்களேல் அவர்கள் செய்கையை இதர பத்திரிகைகள் யாவற்றிலும் பிரசுரம் செய்வதே தகுதியெனக் கருதுகிறோம்.

பத்திரிகாசிரியர்.

---

நாராயணதாஸர் உபந்நியாஸம்.

## "இல்லறமல்லது நல்லறமன்று."

(தத்துவார்த்தம்.)

(இல் = வீடு அல்லது மோக்ஷம்) இல்லறமல்லது = மோக்ஷ தர்மத்தையல்லாமல், (அந்நிய அறம்) நல் = சிரேஷ்டமான, அறம் = தருமம், அன்று = அல்லவாம் என்றவாறு.

அஃதாவது:—"மோக்ஷதர்மத்தைக் காட்டிலும், இதர தர்மம் உத்கிருஷ்டமான தன்று." என்பது கருத்து. (இஃது வேதமாதாவென்னும் ஔவைப் பிராட்டியாருடைய திருவாய்மொழி.)

இவ்வாக்கியத்திற்குச் சிலர் "கிருகஸ்தாஸ்ரமத்திற் கன்னியமான தர்மம் நல்லதன்று." என பாகியமாகவே அர்த்தஞ் செய்துவிடுகின்றனர். ஈண்டிது பொருத்தமாயின், லோகோபகாரார்த்தமாய் இப்புவியின்கண் ணவதரித்தருளிய, நமதன்னையார் சுமார் இருநூறாண்டு பரியந்தம் ஜீவன்முக்தராயிருந்தும், கிருகஸ்த தர்மத்தில் பிரவேசிக்கக் கருதவேயில்லை என்ற உண்மை அவர் வாக்கிற்கு மாறாயிருக்கிறது. ஆனால், இவர்கொண்ட கோளுந்தான் சரியெனத் தீர்மானிப்போமாயின், திருக்குற ளாசிரியராகிய தெய்வப்புலமை ஸ்ரீமத் திருவள்ளுவநாயனார் இல்லற (கிருகஸ்த) தர்மத்தையே நன்கனுஷ்டித்துக் காட்டினராயினர். இவர் துறவறம் இல்லறம் இவ்விரண்டிலேதாவதொன்றை தூஷிக்கவோ வல்லது பூஷிக்கவோ விருப்பங்கொண்டதாகப் பிரமாணங் காணப்படவில்லை. இது நிற்க, மாதரு பூதேஸ்வராம்ஸபூதரான ஸ்ரீமத் தாயுமானவஸ்வாமிகளும் "இல்லறந் துறவற மிரண்டும் மேன்மையே" எனக்கூறியுளார். இப்படியே இன்னும் பல மகாத்மாக்களுந் திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றனர். இவ்வாறிருக்க, நாமெங்ஙனம் நமதன்னையின் திருவாக்குக்குமாறாக 'இல்லறம் அல்லது துறவறம்' நல்லறமெனப்பாகியமாகவே பொருட்கொள்வது. அஃதெவ்வாற்றானும் பொருத்தமாகத் தோன்றவில்லை.

ஆயின், இக்கீதிமொழிக்கு திருவருளின் பிரேரபனையால் என்னிருதயத்திருந்து ஓர்வித அர்த்த முதையமாகிறது. அஃதாவது:—

இல்லறந் துறவறம் முதலிய எந்த ஆஸ்ரமத்தாராயினும், ஜனனமரண ஸ்வரூபமான சம்சார பந்தத்தினின்றும், விடுபடுவதற்கு 'மோக்ஷதர்மத்தை' விட வேறொரு சாதனம் வேதோபநிடதங்களில் விதிக்கப்படாமையாலும், அதற்கிணங்கவே நமதுமாதாவும் "இல்லற மல்லது நல்லற மன்று" என்றருளி, இதனுண்மை வெளிப்படையன்று அதிஸூக்ஷ்மமா மென்பதைக் குறிப்பாயுணர்த்துவான்வேண்டி துறவறத்திலிருந்துவிட்டமையாலும் இதற்கு, "மோக்ஷ தர்மத்தைக்காட்டிலும் அந்நியதர்மஞ் சிரேஷ்டமானதன்று" என்பதுதான் சரியான அர்த்தமாயிருக்கலா மென்பது துணிபு. இனி மோக்ஷதர்மம் ஈதென்பதைப் பற்றிச் சிறிது விசாரிப்பது அத்தியாவசியமானபடியால் மேலதைக் கூறுவோம். அஃதாவது:—

'மோக்ஷம்' என்றால், 'விடுபடுதல்' என்றர்த்தம். அதாவது.—சம்சாரபந்த (சர்வதுக்க)த்தினின்றும் விடுபடுதலாம். இந்த சம்சாரபந்தமானது காமத்தா (ஆசையா)லுண்டாகிறது. காமத்திற்கிருப்பிடம் மனமாம். இந்த மனமெங்கே விலய மடைகின்றதோ, அங்கே மோக்ஷ (பரமபத)மாம். மோக்ஷமாகிய 'பரமபத' மடைவதற்கு முக்கியசாதனம் பக்தியாம். அந்த பக்தியான தெப்பேர்ந்கொத்ததெனின்? தனது யதார்த்த ஸ்வரூபத்தையறிதலாம். இதைப்பற்றி ஸ்ரீமத் ஆசார்யஸ்வாமிகள் அருளிச்செய்திருக்கிறதாவது:—

" மோக்ஷகாரண ஸாமக்கிரியாம், பக்திரேவ கரீயஸீ |
ஸ்வ ஸ்வரூபாநுஸந்தானம், பக்திரித்ய பிதீயதே || " (விவேகசூடாமணி)
(தாத்பர்யம்) மோக்ஷத்துக்குக் காரணமான சாமக்கிரியைகளில் பக்தியே விசேஷமானது. அந்த பக்தி யெப்பேர்க்கொத்த தெனின், தன் ஸ்வரூபானுசந்தானமாம். என்றவாறு.

இதனால், முக்திக்கு பக்தியே மூலகாரணமென்றும், பக்தியென்பது தன் ஸ்வரூபா (ஆத்மா)னு சந்தானமென்றும் நிர்மானமாகிறது. எவன் ஸதா ஸ்வரூபானுஸந்தான (ஆத்மத்தியான)ஞ் செய்கின்றானோ அவன் தன் நிஜ சொருபத்தைக் காண்கிறான். தன்னைக் காண்கிறவன் (அதாவது தன் ஆன்ம சொருபத்தைத் தரிசிக்கிறவன்) தலைவனையும் (பரமான்மாவையும்) காண்கிறான். தன்னைக் கண்டவனுக்குண்டாகும் பரமானந்த சுகத்தைப் பற்றிக் கைவல்ய நவநீதத்தில்.—

" தன்னையுந் தனக் காதாரத் தலைவனை யுங்கண்டா னேல்
பின்னையத் தலைவன் றானுய்ப் பிரமமாய்ப் பிறப்புத் தீர்வன்
உன்னைநீ யறிந்தா யாகி லுனக்கொரு கேடு மில்லை
என்னைநீ கேட்கை யாலே யீதுப தேசித் தேனே."

என, ஸ்ரீமத். தாண்டவராயஸ்வாமிகள் அருளிச்செய்திருக்கின்றனர் இவ்வாறே, எல்லா ஸ்ருதி, ஸ்மிருதி, புராணேதிகாசாதி கிரந்தங்களிலும் விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகலின், கைவல்லியமாகிய மோக்ஷசுகத்தின்பொருட்டு தன்னையும், (ஆன்மாவையும்) தலைவனையும் (பரமான்மாவையும்) அறியவேண்டும். இன்றேல், காலச்சக்கரங் கழுத்தைச் சேதிப்பது நிச்சயம். தன்னைத்தானறிந்துகொள்ள வேண்டுமானல் பரமாத்மாவைச் சரணடைவதற்காகிலும் அந்நிய சாதனங் கிடையாது. ஸ்ரீபகவத்கீதை 18-வது அத். 65-66, இந்த சுலோகங்களைப் பார்க்க. ஸ்ரீபகவானைச் சரணமடைவதென்றால், ஸ்ரீபகவத்கீதை 5-6 இந்த அத்தியாயங்களிற் கூறியவண்ணம் ஸ்வரூபானு சந்தானம் அல்லது ஆத்மானு சந்தானஞ் செய்தலேயாம். அந்த ஆத்மானு சந்தானமாகிய யோகாப்பியாசமானது குரு சிட சம்வாத ரூபமாகிய குப்த விஷயமாகையால், அதைப்பற்றி வெளிப்படையாய்க் கூறுதல் கூடாதாயினும், எப்படி அவதூதராகிய ஸ்ரீமத் தத்தாத்திரேய ஸ்வாமிகள் 24 குருமூலமாய்த் தானே தத்துவரகஸ்யத்தைக் கிரகித்துக்கொண்டதுபோல், இதைப் பாகவதத்தில் அவதூதயது சம்வாதத்திலாவது, அவதூத கீதையிலாவது பார்க்கக் காணலாம். இதுவும், ஒருகால் உத்தம முமுக்ஷுக்களுக்கு உபகாரமாயிருக்கலா மெனக் கருதி, பிரபல சுருதிகளினின்றும் ஆராய்ந்தெடுத்த சில பாசுரங்களையுஞ் சுலோகங்களையும் மாத்திரம் ஈண்டு கூறுகிறோம். அவை வருமாறு:—

ஆத்மாநுசிந்தனம்:—

" க்கமத்யேச குருசாத்மாணம், ஆத்ம மத்யேச க்கம் குரு |
ஆத்மாரம் க்கமயம் க்ருத்வா, நகிஞ்சி தபிசிந்த்தயேத் || " (உத்தரகீதை)
(தாத்பர்யம்) ஆகாயமத்தியில் ஆத்மாவைச்செய், ஆத்மமத்தியில் ஆகாயத்தைச் செய். ஆத்மாவை ஆகாய மயமாகச் செய்து, கொஞ்சமாகிலும் அந்நியத்தைச் சிந்திக்கக்கூடாது.

பரமாத்மாவைத் தியானிக்குமிடம் :—

" புடத்வய விநிர்முக்தோ, வாயுர் யத்ர விலீயதே |
தத்ர ஸம்ஸ்தம் மந: க்ருத்வா, தம்த்யாயேத் பார்த்தாக்ஷரம் || (ஷடி கீதா)

(தா-ம்) இரண்டு நாசியினின்றும் வெளிப்பட்ட வாயுவானது எங்கேலயமடைகின்றதோ, அங்கே மனதைச் செவ்வையாக நிற்கச் செய்து, பார்த்தா! அந்த பரமாத்மாவைத் தியானிக்கவேண்டும்.

தேவாலயம், தேவன், பாவனை, பூஜை முதலியன :—

" தேஹோ தேவாலய: ப்ரோக்தோ, ஜீவோ தேவஸ் ஸதாசிவ: "
த்யஜேத் அஞ்ஞான நிர்மாலியம், 'ஸோஹம்' பாவேந பூஜயேத் ॥ "
(ஸ்கந்தோபநிஷத்) (தா-ம்) தேஹமே தேவாலயமென்று சொல்லப்படுகிறது. ஜீவனானவன் எப்போதும் மங்களகரமான தேவனாயிருக்கிறான். அஞ்ஞானமாகிய நிர்மாலியத்தைத் தள்ளிப்போட்டு, "அது நானாயிருக்கிறேன்" என்னும் பாவனையுடன் பூஜிக்கவேண்டியது. (இந்த சுலோகத்தில் 'அஜபா' (வெளிப்படையாய்ச் சொல்லாது கண்டத்திற்குள்ளேயே ஜபிக்கும்) மந்திரம் ரகஸ்யமாயிருக்கிறது.)

ஆலயம், தேவதை, ஏகாந்தமந்திரம் :—

" தேகால யத்தில் சிதாகாச தேவதையை
ஆகாச சாந்தி மலராலே—யேகாந்த
மந்திரத்தால் பூசைசெய்து மாதவரை யாதரித்து
சந்ததம் வாழ்வார்க் கார்சரி." (சோநபசாரம்)

சிவ (ஏகாந்த)மந்திரம் அல்லது 'ஒருமொழி' சமாதி:—

" சிந்தனை புறஞ்செலாச் 'சிவோஹம்' பாவனை
சந்தத முனூற்றிடிற் சமாதி வந்துறும்
அந்தநற் சமாதியா லறிவு மேவிடும்
இந்தநன் னிலையிலே யிருக்கற் பாலையே." (வள்ளலார்)

மூக்கண்ணனை மகாவாக்கியத்தால் சிந்தித்துப் பிறப்பறுத்தல்:—

" கல்லா லமர்ந்தாரைக் கண்மூன் றுடையாரைச்
சொல்லாமற் சொல்லவந்த தூயாரைப்—பல்காலுஞ்
சிந்தி சிவோகஞ் சிவோகஞ் சிவோகமென
வந்தி பிறப்பறு மாறு." (வள்ளலார்)

(தொடரும்.)

A. அர்த்தநாரி சர்மா, பனமரத்துப்பட்டி, சேலம்.

குறிப்பு :—மேற்கண்ட சூத்திரங்கள் பாசுரங்களுக்கு அனுபவமாகப் பொருளறிய விரும்புவோர் அனுபவமுடையோரிடம் நேரிற் கேட்டறிந்து கொள்ளவேண்டும். எவ்வளவு கல்விமான்களாயினும் சுய அனுவமில்லாதாரைக் கேட்பதில் பயனில்லை. அவர்களிடமும் நேரிற் கேட்காது கடிதமூலமாய்க் கேட்பதால் சற்றும் பயனில்லை. (பத்திரிகாசிரியர்.)

---

## விபூதி.

சிவபெருமானது அருட்சத்தியாராகிய உமாதேவியாரது சொரூபமாயும், சைவசமயிகள் யாவரும் தரிக்கவேண்டிய இன்றியமையாத சின்னங்களுள் முதற் சின்னமாயும், தரித்தோரது பாவங்களை யெல்லாம் போக்கிப் பரஞானம் நிலைக்கூடும்படி செய்து பரமுத்தியைத் தரத்தக்கதாயும், எச்சமயத்தாரும் தங்கள் சமய வழிபாட்டில் கொள்ளத்தக்க சாதனமாயும், தேவர், முனிவர், மனிதர், நாகர் முதலிய எல்வகையினராலும் விரும்பித் தரிக்கப்படும் திருவடையாளமா

யும், வேத, சிவாகம, புராண, இதிகாச, ஸ்மிருதிமுதலிய எல்லாப் பிரமாணநூல்களும் புகழ்ந்து பேசுவதாயும், காண்போர் மனத்தைக் கவர்ந்து வசீகரிக்கத்தக்கதாயும், அணிந்தோர்களை ஆபத்தினின்றும் நீக்க வல்ல மெய்க்கவசமாயும் உள்ளது விபூதியாம்.

இவ்விபூதி இகபர மிரண்டினும் எத்தகைய செல்வத்தினையும் தருதலால் விபூதி என்றும், தரித்தோர்க்கு சிவனைத் தோற்றுவித்தலால் பசிதம் என்றும், அணிபவர்களது பாவங்களை வேரறப்பறித்தலால் பஸ்மம் என்றும், மெய்க்கவசமாக இரக்ஷித்துக் காத்தலால் இரக்ஷை என்றும், உயிர்களது மலத்தைக் கழுவுதலால் க்ஷாரம் என்றும், பாவங்களை நீக்குதலால் நீறு என்றும் பெயர் பெறும்.

நித்த முத்த நிஷ்களராகிய சிவபெருமான் சகளீகரித்து தம்முடன் தோன்றிய பராசக்தியாரை நோக்கி பஞ்ச கிருத்தியங்களைச் செய்யும்படி கூறித்தாம் சுயேச்சையா யிருந்தனர். அதற்குப் பராசக்தியார் அப்பஞ்ச கிருத்தியங்கட்குக் காப்பாகிய திருவடையாளத்தைத் தமக்கு அருளும்படி வேண்டிக்கொள்ள சிவபெருமான் தம்மைத்தாமே ரிஷப மூர்த்தியாகத் தோற்றுவித்து பராசத்தியை அவரது கலைகளுள் தருமகலைகளைக் கொண்டு திருப்பாற்கடலில் பசுவா யுதிக்கும்படி பணித்தருளினர். அக்கலைகளும் அவ்வாறே பாற்கடலில் நந்தை, சுரபி சுமனை, சுசீலை, சுபத்திரை யென்னும் ஐந்து *பசுக்களாயுதித்து சிவலோகத்தையடைந்து விருஷபமூர்த்தியோடு கலந்திருந்தன. சிவபெருமான் அவைகளின் கோமயத்தை சிவாகம விதிப்படி விபூதியாய் விளைத்து தமது நெற்றியில் அணிந்துகொண்டு உமாதேவியார் கையில் கொடுத்து இதுவே நீ வேண்டிய காப்பாகுமென்று சொல்லி யருளத் தேவியார் அதனைக்கொண்டு பஞ்ச கிருத்தியங்களையும் செய்தருளினர். ஆதலால் சிவசொரூபமே விபூதியென்று வேத முதலிய சகல சாஸ்திரங்களும் கூறுகிற்கும். இதுவே விபூதியின் தோற்றம்.

இனி இவ்விபூதி குற்றமற்ற சுத்தமான பசுவின் கோமயத்தை மந்திரபூர்வமாக சிவாக்கினியில் தகித்தபோது கற்ப விபூதி எனப்படும்.

இப்படி விளைந்த விபூதியுள் கருநிற விபூதி வியாதியையும், செந்நிற விபூதி கீர்த்தி நாசத்தையும், புகைநிற விபூதி ஆயுர் நாசத்தையும் உண்டாக்குமாதலால் அவைகளை நீக்கி வெண்ணிற விபூதி அளவில்லாத புண்ணியத்தை விளைக்குமாதலால் இதனையே தரித்தல் வேண்டும்.

இத்தகைய விபூதியைப் புலித்தோல், மான்தோல், பட்டு முதலியவைகளால் செய்த பையிலேனும், வில்வக்குடுக்கை, சுரைக்குடுக்கை, சம்புடம் இவைகளிலேனும் வைத்து உத்தூளனமாகவும் திரிபுண்டரமாகவும் கிரமப்படித் தரிக்க வேண்டிய தானங்களில் மந்திர பூர்வமாக சொல்லப்பட்ட அளவுகளில் கூடாமலும் குறையாமலும் தரித்தல் வேண்டும். (உத்தூளனம் என்றால் அப்படியே பூசிக்கொள்ளுதல். இது எக்காலத்திலும் தரிக்கத்தக்கது. திரிபுண்டரம் என்பது ஜலத்தில் குழைத்து மூன்று கீற்றுகளாய்த் தரித்தல். இது மரண சூதகம் முதலிய காலங்களில் தரிக்கலாகாது.)

விபூதியின் மகிமை பல உபநிஷத்துக்களாலும் யஜுர்வேதம் முதலியவற்றாலும் கோஷிக்கப்படுகின்றன. தமிழ் வேதமும் " திரு வெண்ணீறணியாத ஊர் திருவில்லாவூர் " என்றும் அடவிகாடு என்றும் கூறுகின்றது. மணிவாசகர் சிவபெருமானது சேவடி பரவி—" வெண்ணீறணிகிலாதவரைக் கண்டால் அம்ம நாமஞ்சுமாறே " என்று ஓதியருளினர். ஒளவைப் பிராட்டியாரும் "நீறில்லா நெற்றிபாழ்" என்று வற்புறுத்தினர்.

மதுரையில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் கூன் பாண்டியனது சுரநோயைத் தீர்த்து சமணரை வாதில் வென்று சைவஸ்தாபனம் செய்தருளியது விபூதியினா லன்றோ? மனிதர்களுக்கு நெற்றி ஊர்த்துவமாகப் படைக்கப்படாது குறுக்காகப் படைக்கப்பட்டிருப்பதால் தரிக்கத்தக்கது விபூதி திரிபுண்டரமே யென்று ஊகிக்கற்பாலதாகும். விபூதியைச் சரீரத்தில் தரிப்பதினால் மன அழுக்கை மாற்றுவதுடன் புற அழுக்கையும் நீக்குவதால் வைத்தியசாஸ்திர கிரமத்திலும் உத்த மோத்தமான தாகக் கொள்ளப்பெறும். இது அக்கினியில் நீற்றப்பட்டமையின் எத்தனைக்கால மிருப்பினும் கெடாது நிலைபெற்றிருக்கும்

சிவ சின்னமாகிய விபூதியை மெய்யன்போடு தரிப்பவர் சிவபதமடைவர். அது,

கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வீரே யாமாகிற்
றங்கா வினைகளுஞ் சாருஞ் சிவநெறி
சிங்கார மான சிவனடி சேர்வீரே.

என்னும் திருமந்திரத்தா லுணர்க. இவ்விபூதியிலே யிருந்த பக்தியுடையோர் இவ்விபூதியைத் தரித்த அடியார்களைக் காணின், அவர்களுக்கும் சிவனுக்கும் பேதம் நோக்காமல் அவர்களை வழிபடுவர். அதனை,

"எவரேனுந் தாமாக விலாடத்திட்ட, திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி—யுவராதே யவரவரைக் கண்டபோது, வுகந்தடிமைத் திறநினைந் துவந்து நோக்கி—யிவர் தேவ ரவர் தேவ ரென்று சொல்லி, யிரண்டாட்டா தொழித் தீசன் றிறமே பேணிக் — கவராதே தொழுமடியார் நெஞ்சினுள்ளே, கன்றாப்பூர் நடு தறியைக் காணலாமே" என்னும் திருநாவுக்கரசு நாயனார் தேவாரத்தா லறிக.

இத்தகைய விபூதியை நமது சைவ சமயிகள் யாவரும் எப்போதும் இடைவிடாது தரித்துக்கொள்ள வேண்டுவது அவசியமாகும்.

இது தூத்துக்குடி ஸ்ரீமான் சு. சங்கரலிங்கம் அவர்களால் பொதுநலங் கருதி வெளியிடப்பட்ட துண்டுப் பத்திரிகையிலிருந்து எடுத் தெழுதப்பட்டது.

A. M. சங்கர நாராயணன், அம்பா சமுத்திரம்.

குறிப்பு.—இந்த வியாசம் "புண்ட்ரதாரணம்" என்ற வியாசம் நமது ஆடி சஞ்சிகையில் வெளிவிடுவதற்கு முன்பே, அதாவது 29—6—18 லேயே நம்மிடம் வந்து சேர்ந்ததால் மேற்கண்ட வியாசத்தில் காணும் இரண்டொரு விஷயங்கள் அதிலுமிருப்பதைப் பற்றி எவ்வித சந்தேகமும் கொள்ளற் கிடமில்லை, மேலும் சாத்திரங்களி லுள்ளவை யாவர்க்கும் உரித்தானவையே.

பத்திராசிரியர்.

---

## அறம்.

அறம் தருமம் (Duty) ஒரு பொருட்சொற்கள் அறமாவது வரையறுக்கப்பட்டது. அதாவது: நம் முன்னோரால், உலக நன்மையின் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட சிலவிதிகள். அவையாவும் மனிதர் ஒவ்வொருவரும் செய்யக் கடமைப்பட்டிருப்பதால் அவைகள் கடமைகள் என்றும் வழங்கப்படும். அவையாவும் ஒழுக்கம், வழக்கு, தண்டம், என மூவகைகளில் அடங்கும்.

அவற்றுள் ஒழுக்கம் என்பது முன்னோர் ஒழுகிய சிலவிதிகளைக் கைப் பற்றி யவர்கள் நோக்கத்தை நிறைவேற்றல். அவர்கள் நோக்கமாவது உலகில் மானிடர் பிறர்க்குத் துன்பம் விளைக்காமலிருப்பதும் பிறர் துன்பம் கண்டுழி இரங்கி உதவி புரிவதும் தங்கள் கடமை எனக் கொள்வதாம்.

இனி வழக்கு என்பது மானிடர் தனக்குத் தன் உரிமையான பொருள் காரணமாக வாதிடல். இது உண்டாக, கொடுக்கல் வாங்கல் முதலிய பல காரணங்களிருப்பினும் ஒழுக்கந் தவறிய விடத்தேயுண்டாம்.

தண்டம் என்பது அவ்வாறு தவறியவர்களைத் தண்டித்தல்.

இவற்றுள் ஒழுக்கமே உயர்ந்தோரால் நூல்களில் கூறப்பட்டிருக்கிறது. மற்றவை தேசத்திற்கு தேசம், காலத்திற்குக் காலம் மாறுபடும் தன்மைய. மனிதர் தனித்து வாழமுடியாதவர். ஏனெனில் இவர்க்கு ஆகாரம், உடை, மற்றும் பல்வேறு பொருள்கள் எல்லாம் தமக்குத்தாமே தயாரித்தல் ஒண்ணாது. ஆகையால் ஒவ்வொருவரும் யாதாவது ஒன்றைத் தயாரித்து மற்றோர்க்கு உதவி அவரிட மிருந்து தமக்கு வேண்டியவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஆகையால் மனிதர் (ஒருவர்க்கு மற்றொருவருக்கும்) நெருங்கியசம்பந்தம் ஏற்படுகிறது. அப்பொழுது ஒவ்வொருவரும் சிலவிதிகளை யனுஷ்டிக்க வேண்டும். அவ்விதிகளை நம்முன்னோர் வரையறுத்து 'அறம்' என்று பெயரிட்டனர். ஆகவே நாம் அவ்வறத்தை யனுஷ்டிக்கா விட்டால் ஒவ்வொருவரும் பசியால் தூண்டப் பட்டு பலவழியுஞ் சென்று தன்னயம் கருதித்தத்தளிப்பார். அப்பொழுது உலகில் கொலை, களவு மல்கி உயிர் வாழ்தல் முடியா தொழியும். இதை நோக்கி மனிதர் செய்யவேண்டிய அறம் செய்கின்றனரா என்று கவனிக்கும் பொருட்டு வேந்தரையும் ஏற்படுத்தினர் நம் முன்னோர்.

கடவுள் பசியால் உலகில் உயிர்களைப் பொருள்நாடிடச் செய்தார். அரசர் அவர்களைப் பலதொழில்களில் செலுத்துகின்றனர் என்ற கருத்தையான் ஆங்கிலத்தில் கண்டனன். அதை ஓர்பாவால் அடியில் வரைகின்றேன்.

உலகத்துள்ள ஓங்கிய சக்திகள்
பலபல வாயினும் பலத்தில் மிக்கவை
ஓங்கிய பசியும் உயர்ந்த வேந்தும்
பாங்குட னிவற்றைப் பலவழி யாய்ந்தால்
துயர்மிகு பசியும் தூண்டி மானிடரை
நயத்துடன் பலபொருள் நாடிடச் செய்யும்
அப்பொருள்தேடி யலைந்த மனிதரை
தப்பொன்றில்லாத் தனியறத் தொழிலில்
நிலைக்கச் செய்து நீண்முடியரசு
அலைகடல் ஞால மாணையால் காக்கும்.

இதுவரை மானிடர் உலகில் வாழ அறம் அவசியமென்றும், அதிற்றவறில் அரசனால் ஒறுக்கப்படுவர் என்றும் ஒருவாறு பெற்றாம்.

இனி பரலோகத்திற்கும் இதுவே துணை யாதலைக்காட்டுதும்.

ஆன்மா உடல் எடுக்கும்போது உலகில் சிலகாரியங்களைச் செய்ய உத்தேசித்தே எடுக்கிறது. ஆனால் உலகில் பிறந்தவுடன் மாயையால் சூழப்பட்டு தன்னறிவுகுன்றி கட்டுப்பட்ட ஓர்தன்மையை அடைகிறது. அப்படிப்பட்ட உயிர்களிடத்து இரங்கிய பெரியர் தம் அனுபவத்தில் கண்ட சிலவிஷயங்களால் சில விதிகளை ஏற்படுத்தி அதன்படி நடந்தால் ஒவ்வொரு உயிரும் செய்யவேண்டிய

காரியங்கள் முற்றுப் பெறும். அப்பொழுது கட்டுப்பேசன்ற தேகம் அவசிய மின்மையால் மீண்டும் பிறப்பதில்லை.

இவ்வாறு இருமையுந் தருவதால்.

"சிறப்பீனும் செல்வமு மீனும் அறத்தினூங்கு
ஆக்கமெவனோ வுயிர்க்கு"— என்றார் வள்ளுவர்.
அறத்தாறிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தானிடை.

என்று ஆசிரியர் கூறியிருப்பதால் அறம் செய்தாரும் உலகில் பிறந்து அதன் பயனை அனுபவிப்பது அவசியம் என்று விளங்குவதால் அவர் பிறவியை நீந்தார் என்பது யாங்கனம் எனின், அற்றன்று, அறத்தைச் செய்தோரெல்லாம் மறுபடி பிறந்து அதன்பயனை யனுபவிப்பா ரென்றல்ல—பிரதிபலனைக் கோரிச் செய்தோரே யப்படி பிறந்து அனுபவிப்பார்கள். இருவினைப் பயன்களையு மொழித்தா லன்றோ வீடுபெறல் ஆதலின் பிரதிபலனைக் கருதாது ஈசுரார்ப் பணமாய் அறத்தைச் செய்தோர் இருவினைப் பயனையு மொழித்து பிறப்பில்லாப் பேரின்ப வீடடைவார்.

இவ்வறம் மூன்றாக முற்கூறி யாங்குப் பிரிக்கப்படினும் அதை அனுஷ்டிக்க ஏற்பட்ட வழிகளில் முக்கியமானவை இல்லறம், துறவறமென இரண்டாகும்.

பரமசிவ முதலியார். பாப்பான்குளம்.

---

## சங்தேக வினா?

### நித்தியவிதி—வஸ்திரதாரணம்

சென்ற ஆனி (ஜூன்) மாத ஆனந்தபோதினியின் 454-ம் பக்கத்தின் முதல்வரியில் 'உஷ்ணகாலஸ்நானம் கிரகஸ்தாசிரம தர்மத்தை யனுஷ்டிக்கும் ஆடவர்க்கே சிறப்புடையதாம்' எனக் கூறிவிட்டுத் தொடர்ந்தாற்போல 'உஷ்ணம் உண்டானபின் ஸ்நானம் செய்வதால் சரீரத்தினுள்ள மலம் அதிகமாய் வெளிப்படும்' என்பதால் சரீரத்திற்குச் சுகமே. 'அதனால் சரீரசக்தி (வலு) குறையும்' என்பதால் அவ்வுஷ்ணகால ஸ்நானம் தகுதியுடையதன்று எனத் தோன்றுகிறதே? 'கிரகஸ்தனுக்கு வலு அதிகமாய் வேண்டப்படுவதால் அவனுக்கு உஷ்ணகாலம் சிறந்ததாயிற்று' என்பதிலிருந்து கிரகஸ்தனுக்கு வலுவேண்டுவதாலும் உஷ்ணகாலத்திய ஸ்நானம் வலுவைக் குறைப்பதாலும் அது எங்ஙனம் சிறந்ததாகும்? அதே பக்கத்தின் கடைசி வரியில் 'வெயில் தோன்றியபிறகு ஸ்நானம் செய்வதும் அனுகூலமேயாம்' என்று கூறியிருப்பதும் முரணுவதோடு, வைகாசிமாத சஞ்சிகையிலும் சூரியன் உதயமாகி அவ்வுஷ்ணம் (ஒளி) தேகத்திற் படுமுன்னமே ஸ்நானம் செய்தால்தான் தேகத்தினுள்ள மலம் வெளிப்படும், இல்லாவிடின் அவ்வுஷ்ணத்தால் மேலேயுள்ள மலம் உலர்ந்து, உள்ளேயுள்ளனவும் வாராதபடி தடைப்படுத்தும் ஆதலால் பிராதக்காலத்திலேயே ஸ்நானம் செய்வதுதான் உசிதம் எனவும் கூறப்பட்டிருக்கின்றதே.

ஆதலே, நமது முன்னோர், நமது நன்மைக்காகவே, முற்காலத்தில் ஏற்படுத்தியுள்ளதும், அவற்றைத் தற்போது, நம்மவர்களில் தெரியாத பாமரர்களுக்கும் தெரியும்படி, நமது போதினியில் வெளியிட்டுக்கொண்டுவரும், ஸ்ரீ சிவா

நந்த யோகீஸ்வரரவர்களுக்கு அடியேன் அனேக வந்தனங்கள் அளிக்கக் கடமைப்பட்டவனா யிருப்பதோடு, முன்னோர்களின் ஏனைய ஏற்பாடுகளையும் நமது போதினியில் வெளியிட்டு, நமது சகோதரப் பாமரர்கள் அறிந்து அவ்வழியே உய்யுமாறு வெளியிடவும், மேற்போந்த எனது சந்தேகத்தினையும் நமதானந்த போதினிமூலமாகவே நிவர்த்திக்குமாறும் நமதானந்தன் மூலமாகவே ஸ்ரீயோகீஸ்வரரவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

P. பரிமணப்பல்லவராயர்.

---

## ஆனந்தபோதினி

கனம். பத்திராதிபரவர்கட்கும் சகோதர சந்தாநேயர்களுக்கும் சந்தாநேயர்களி லொருவனாகிய அடியிற் கையொப்பமிட்ட யான் தெரிவித்துக் கொள்ளுவதாவது:—

நமது ஆனந்தனின் ஆனி (ஜூன்) மாத சஞ்சிகையின் 471-ம் பக்கத்தில் நமது சந்தாநேயர்களி லொருவரும் சிலோன் வாசியுமாகிய ம-ள-ள-ஸ்ரீ பெர்னாந்து அவர்களுடைய பிரார்த்தனையையும் பத்திரிகாசிரியரவர்களின் குறிப்பையும் பார்வையிட்டேன்.

நமது ஆனந்தன் நமது சந்திப்பைப்பெற, மாதமிருமுறையல்ல, மும்முறை வரினும், சந்தாவை ரூபாய் ஒன்றரையல்ல, இரண்டாக உயர்த்தினும், அவன் தனது அங்கங்களில் ஏந்திவரும் மிக்க ஏற்றம் பொருந்திய பொருள்களுக்குப் போதுவன வாகாதென்பது திண்ணமே.

ஆயினும், யுத்தகாலத்திய அகவிலை ஏற்றத்தினால் ஏழைகள்முதல் ஏற்ற முள்ளோர்கள்வரை, இயம்பொண்ணா இன்னலை அனுபவிக்கும் சமயமாகிய இப்போது எக்காரணத்தைக்கொண்டும் சந்தாவை உயர்த்துதல் உசிதமன்றென்பது எனது முழுநோக்கமாகும்.

ஏனெனில், நமதானந்தனுடையவும் நம்முடையவும், முக்கியநோக்கம், 'நமதானந்தனை வறியோர்முதல் வ[illegible]ந்தோர்வரை யாவரும் வாங்கி வாசித்து நற்பயனை யடையவேண்டுமென்பதன்றோ?' ஆகவே அவ்வவர்களின் சௌகரியத்தின் பொருட்டு சந்தாவும் தற்போதிருக்கும் அளவிலேயே இருத்தலவசியம். இல்லையேல் சந்தாதாரர்களின் சங்கியை குறைவுபட நேரிட்டாலும் நேரிடலாம்.

P. பரிமணப்பல்லவராயர்.

**குறிப்பு.**—நமது நண்பரது மேல்கூறிய அபிப்பிராயம் கவனிக்கத்தக்கதே. அதைக் கவனித்தே இவ்வளவு குறைந்த சந்தா ஏற்படுத்தினோம். இப்போது காகிதவிலை யேறியிருக்கும் அளவைநோக்க, இச்சந்தா அளவுமீறிக் குறைந்ததாய்விட்டது. ஒன்றரை ரூபா யாக்கினால் அது அவ்வளவு கஷ்டமானதா யிராது என்பதே பலர்கருத்து. ஒருமாதத்திற்கு இத்தகைய விஷயத்திற்காக 2-அணா செலவழிப்பது அவ்வளவு கஷ்டமாய்த் தோன்றாது. அன்றாடம் 0—4—0 சம்பாதிப்பவன்கூட அரைநாள் வரும்படியை இதற்காகக் கொடுக்கலாம். அப்படியிருக்கச் சந்தாவையுயர்த்த அஞ்சுவதேனெனில்; நம்மவர்களில் பெரும்பாலார்க்கு கல்வியின் அருமை இன்னும் தெரியவில்லை. அதிலும் நம் அருமைத் தமிழின் மகிமையை யுணர்ந்து அதை விர்த்திசெய்வதைவிட்டு அன்னிய பாஷையைப் புகழ்ந்துகொண்டாடும் தன்மையுடையவர்களா யிருக்கிறார்கள். செல்வவந்தர்களோ யிதிலபிமானமின்றி இதற்கு ஒரு ரூபா செலவு செய்

விட நாடகத்திற்குத் தினம் 5, 10 செலவுசெய்யச் சந்தோஷமுடையவர்களாயிருக்கிறார்கள். அனேகர் தாங்கள் அலட்சியமாய்ச்செய்யும் அனுவசிய செலவில் பலபாகங்களில் ஒரு பாகத்தை இதற்குக் கஷ்டமின்றி கொடுத்து கஷ்டமின்றி தங்களுக்கும் தாய்ப்பாஷைக்கும் நன்மை செய்யக்கூடும். அவர்கள் மனந்திரும்பாக்குறையே யன்றி வேறில்லை. அக்குறையை நீக்குமாறு கருணாநிதியைப் பிரார்த்திப்போமாக.

பத்திரிகாசிரியர்.

---

## தமிழ்ப் பாஷை.

தமிழபிமானிகளாகிய சந்தா நேயர்களே! மேலே எடுத்துக்கொண்ட விஷயம் மிகப் பெரியது. இரண்டொரு வியாசங்களுக்குள் எழுதி முடித்த லரிது. இப்பூமண்டலத்துட் பிறந்துள்ள ஆறறிவுள்ள ஜீவராசிகள் தங்களுடைய கருத்தைப் பிறருக்கு அறிவிப்பதற்கு இன்றியமையாத கருவியாயிருப்பதே பாஷை. தேசங்கள் தோறும் பலவகையான பாஷைகள் வழங்கிவருகின்றன. தமிழ்ப் பாஷை எவ்வளவோ காலத்திற்குமுன்பு தோன்றி, வடக்கே வேங்கடத்திற்கும் தெற்கில் கன்னியா குமரிக்கும் மத்தியிற் பரவி பாண்டிய மன்னரால் ஆதரிக்கப்பட்டு வந்ததென விளங்குகின்றது. "தமிழ்ப் பாஷை அகஸ்தியர் நாவிலே பிறந்து, ஆரியத்தின் மடியிலே வளர்ந்து, ஆந்திரம் முதலிய பாஷைகளின் தோழமை பெற்றுச், சங்கப்புலவர்களுடைய நாவிலே சஞ்சரித்து, வித்துவான்களுடைய வாக்கிலே விளையாடித், திராவிட தேசம் முழுவதும் ஏகச்சக்ராதிபத்யஞ் செலுத்திவந்தது." என்று வித்துவான் வேதநாயகம் பிள்ளை அவர்கள் தமிழின் அருமையைப் பற்றிக் கூறியுள்ளனர்.

முற்காலத்தில் தமிழ்ப் பாஷையில் பாட்டுகளும், பாசுரங்களும் ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டிருக்கின அத்தகைய புத்தகம் ஒரே புத்தகம் தான் குருவினிடம் இருக்கும். அதை ஒரு மாணாக்கன் படிக்க மற்றவர்கள் பின்னே சொல்லுவார்கள். பிள்ளைகளுக்குச் சந்தேகம்வருமாயின் குருவினிடம் சென்று நிவர்த்தி செய்துகொள்ளுவார்கள். இக்காலத்தில் அச்சியந்திரத்தின் உதவியால் வசன நடையில் வேண்டுமான பிரதிகள் அச்சில் பதிப்பிக்கப்படுகின்றன. ஒரே மாதிரி புத்தகங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் அகப்படுகின்றன. அதனாலேயே மாணாக்கர்கள் ஒரு புத்தகம் போனால் மற்றொன்று கிடைக்கின்றது என்ற தைரியத்துடன், படிப்பில் சிரத்தை அதிகமின்றி யிருக்கின்றனர். முற்காலத்தில் வித்துவான்கள் கவிகளும், பாசுரங்களும் எழுதி அரசர்களிடம் சென்று அரங்கேற்றி, அரசனால் அளிக்கப்படும் வெகுமதியைப் பெற்று ஜீவித்து வந்தனர். தற்காலத்திலோ பண்டிதர்கள், அநேக பிரதிகளை அச்சிற் பதிப்பித்து, அவைகளை விற்று கௌரவமாகப் பிழைத்து வருகின்றனர். இக்காலத்தில் தமிழ்ப்பாஷையை அபிவிருத்திசெய்ய சௌகர்யங்கள் குறைவின்றியிருந்தும் தாய்ப்பாஷையை அலக்ஷியம் செய்து அன்னிய பாஷைகளில் காலமெல்லாம் போக்குவது தமிழ்நாட்டிற் பிறந்த மக்களுக்கு அழகாகுமோ? தமிழ்நாடு செழிப்புற்றிருந்த காலத்தில் தமிழ்ப் புலவர்கள் பலர் எழுதிவைத்துப் போயிருக்கின்ற அருமையான நூல்களைப்படிக்காதவர்களும், பெயரையே கேட்டிராத அறிவிலிகளும் தவிர மற்றெவரும் தமிழ்ப் பாஷையை அலக்ஷியம் செய்யமாட்டார்கள்.

இப்படியாக சுயபாஷையில் வசன நூல்கள் ஏற்பட்ட பிறகு நம் தாய்ப் பாஷையாகிய தமிழ்ப் பாஷையை தூஷணை செய்து அபிவிருத்தி செய்யா

திருத்தல் நம்முடைய தேசத்தின் க்ஷீணதசைக்கு அறிகுறியாகும். ஆயினும் இத்தகைய கேடுநி நம்முடைய நாட்டை அணுக வொட்டாமற் றகேற்கும் பொருட்டு தேசாபிமானிகள் பலர் ஒன்று கூடி தேசிய கல்விச் சாலைகளை ஸ்தாபிக்க முயன்று வெற்றிபெற்று வருகிறார்கள். இக் கல்விச் சாலைகளில் தாய்ப் பாஷையை சிரத்தையுடன் போதிக்கத் தகுந்த ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். இத்தகைய கல்விச் சாலைகள் பற்பல விடங்களில் ஸ்தாபிக்கப்படுமாயின் நமது தாய்நாடு மேம்பாடடையு மென்பதற்கு ஐயமில்லை.

நண்பர்களே! கடைசியாக யான் உங்களுக்குள், அறிவைப் பரவச்செய்வதில் சஞ்சீவியை யொத்த இப்பத்திரிகையின் பத்திரிகாசிரியருக்கும், ஓர் விண்ணப்பம் செய்து கொள்ளுகின்றேன். இப்பத்திரிகையின் சந்தாதாரர்களாகிய யாமெல்லோரும் ஒருங்கு சேர்ந்து அவ்வவ்வூர்களில் தமிழ்ச் சங்கங்கள் ஸ்தாபித்து தாய்ப் பாஷையின் அபிவிருத்திக்காக உழைப்போமாயின் நம்முடைய இந்திய நாட்டில் தமிழ்ப் பாஷை முற்காலத்திலிருந்த உன்னத நிலைமையை யடையுமென்றே யான் நம்புகிறேன். இத்தகைய சங்கங்கள் ஸ்தாபிக்க முயலும் வண்ணம் அருள்புரிய வேண்டுமாய் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

N. K. இராஜகோபாலன்.

குறிப்பு:—நமது சந்தாநேயர்கள் இதை வாசிப்பதோடு விட்டு விடாது மனதில் வைத்து அனுபவமாய்ச்செய்ய முயல்வார்களேல் நல்ல பலனை யடையலாம் என்பதிற்றடையில்லை. ஆண்டவன் அவர்கள் மனந்திருப்பி இது விஷயத்தில் சிரத்தை கொள்ளுமாறு செய்யவேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம்.

பத்திரிகாசிரியர்.

---

## பகவத்கீதை—கர்மயோகம்.

அத் 4: சு, 1-2-3, நாசமற்ற பலனைக் கொடுத்தற் கேதுவான இந்த கர்மயோகத்தை ஸ்ரீ வாசுதேவனாகிய நான் ஆதிகாலத்திற் சூரியனுக்குச் சொன்னேன். சூரியன் மநுவுக்குச் சொன்னான். மநு இக்ஷ்வாகுவிற்கு உபதேசித்தான். ஏ! அருச்சுன, இவ்விதம் பரம்பரையாய் வந்த இந்த கர்மயோகத்தை ராஜாக்களும் ரிஷிகளும் அறிந்திருந்தார்கள். வெகுகாலமானமையாலே அந்த கர்மயோகம் இந்தலோகத்தில் நஷ்டமாய்விட்டது, நீ என்பக்தனாயும் தோழனாயுமிருக்கின்றாய் யாதலாற் பழமையான அதே கர்மயோகம் என்னாலே இப்பொழுது உனக்குச் சொல்லப்பட்டது. இது ரகசியமுஞ் சிரேஷ்டமுமாவது.

மேலேயுள்ள சுலோகத்தில் "ரகசியம், சிரேஷ்டம் என்பது என்னவென்றால், அத்தியாயம் 2, சுலோகம் 40, 50, 51, இம்மூன்றிலுள்ள பொருள்களைக் கண்டு தெரிந்து நடப்பதே யாகும். அப்படித் தெரிந்து நடந்தால் மோக்ஷ சாதனம் கைகூடும்.

சு, 14-ல், என்னைக் கர்மங்களடைதலில்லை. எனக்குக் கருமபலத்திலாசையில்லை. இவ்வாறென்னை எவன் தெரிந்துகொள்கின்றானோ அவன் கருமங்களாலே கட்டப்படுதலில்லை என்றருளியதற்கு (ராகவேந்திர சுவாமிகள்) ஜீவன் போல் பலா பேக்ஷையாலே நான் கருமங்களைச் செய்யாமையாற் கருமங்களாவது பலனாவது என்னைக் கட்டுதலில்லை. அந்தந்தப் பிராணிகள் பூர்வஞ்செய்த நல்வினைத் தீவினையை யநுசரித்துச் சிருஷ்டித்தலாற் பல விசித்திர சிருஷ்டி செய்த பக்ஷபாத தோஷமென்னை யடைதலில்லை. இவ்வாறென்னை யறிந்தவ

னுக்கே பந்தமிலாதபோது எனக்குப்பந்தமேது, "இவ்வாறென்னை யறிகிறவன்" என்றவாக்கியத்தால் ஸ்ரீகண்ணபிரான் பரமாத்மன் அறிகின்றவனென்பதும் ஜீவன் அறியப்படுகின்றவன் என்பதும் தெரிகின்றமையாற் ஜீவேசுவரபேத முறுதிசெய்யப்பட்டது என்றும் (பாஷியக்காரர்) பிராணிகளின் பிராசீன கருமங்களுக்குத் தக்கபடி, தேவர், மநுஷ்யர், பசு, பக்ஷியாதிதேகங்களாய்ச் சிருஷ்டிக்கின்றேனே யல்லாது என்னிஷ்டப்படி அவ்வாறு சிருஷ்டிக்கின்றேனல்லேன் பிராணிகளின் தேகத்திற்குக் காரணம் அவற்றின் பூர்வகர்மமாதலாற் பக்ஷபாத தோஷமென்னைச் சார்தலில்லை. பிராணிகளின் பூர்வகர்மத்திற்குத் தக்கபடியே அவற்றிற்கும் வேண்டிய வஸ்துக்களையுங் கொடுக்கின்றேன். இங்ஙனம் நான் நிமித்திய காரணமாக * மாத்திரமிருத்தலாற் பலன் என்னைச் சார்தலில்லை. இவ்வாறென்னை அறிகின்றவன், அவனது கர்மயோகத்துக்கு விரோதியான பூர்வகர்மத்தாற் கட்டப்படுதலில்லையென்பது கருத்தென்றும், (சங்கராச்சாரிய சுவாமிகள்) அகங்காரமாவது பலாபேக்ஷையாவது பகவானுக்கில்லாமையாற் கர்மபலன் அவனைச் சார்தலில்லை தானே பிர்மமென்பதையும் ஒரு கர்மத்திற்குத் தான் கர்த்தா அல்லனென்பதையுமுணர்ந்து அகங்காரம், ஆணவம், ஆசை டம்பம் முதலியன இல்லாமலிருக்கின்றவனையுங் கர்மங்கள் கட்டுப்படுத்தலில்லையென்றும் சொல்கிறார்கள். சுலோகம், 15-ல், இவ்விதமறிந்து முன்னோர்களான மோட்ச இச்சையுள்ளவர்களாலுங்கூட கர்மயோகஞ் செய்யப்பட்டது. ஆதலால் முன்னோர்களாலே செய்யப்பட்டதும் நீடித்து நடந்து வந்ததுமான கர்மயோகத்தை அருச்சுனா நீ செய்யென்றும் சொன்னார். மேலே சுலோகம் 14-ல் என்னைக் கர்மங்களடைதலில்லையென்று காரணங்கூறுமலே அருளியதற்கிணங்க ஈண்டும் இவ்விதமறிந்து என்று 15-வது சுலோகத்திலும் அருளினான். காரணங்கூறுமிடத்துப் பாஷியக்காரர்கள் தத்தம் மதக்கொள்கைக்கிணங்கக் கூறுதலாற் காரண விஷயத்தி லிறையவன் றிருவுள்ளம் யாதோ? ஆராய்ந்து உணர்க. சுலோகம் 18-ல், கர்மத்தில் அகர்மத்தை யெவன் பார்க்கின்றானோ அகர்மத்திற் கருமத்தை யெவன் பார்க்கின்றானோ அவன் மனிதர்களில் விவேகமுள்ளவன். மனச்சமாதானமுள்ளயோகி. அவன் சகல கர்மயோகங்களையுஞ் செய்தவனுமாகின்றான் என்றதற்கு (சங்கரர்) ஆத்மாவுக்குச் செய்வதுஞ் செய்யாமலிருப்பதுமாகிய கர்மாகர்மங்களிரண்டுமில்லையாகையால், தேகம், மனம், இந்திரியங்கள் என்பனவற்றின் செய்கையை கருமமென்றும் அவற்றாற் செய்யப்படாமை அகருமமென்றுஞ் சொல்லப்படும். அவிவேகிகள் கருமாகருமங்களை ஆத்மாவிடத்தி லாரோபித்து அகங்காரங்களாலே நான் செய்கின்றேன் செய்யாமலிருக்கின்றேன் என்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்வதால் ஆத்மா கருமஞ்செய்தல்போலக் காணப்பட்டாலும் கருமஞ் செய்வது

---

* காரியகாரணங்களில் காரணங்கள் மூன்று வகைப்படும். 1. முதற்காரணம், 2. துணைக்காரணம், 3. நிமித்தகாரணம். குயவன் பானை சட்டி செய்கிறான்; அதிலுள்ள முக்கிய காரணங்கள், 1-மண், 2-திரிகை, (சக்கரம்) 3-செய்யும் ஆளாகிய குயவன். இவற்றில் மண் முதற்காரணம்—திரிகை—துணைக்காரணம்—குயவன் நிமித்த காரணம். அதைப்போலவே சிருட்டியில் — மாயை முதற்காரணம்—கடவுளின் சத்தி துணைக்காரணம்—கடவுள் நிமித்தகாரணம்.

"காரணகாரியங்கள் முதற்றுணை நிமித்தங்கண்டாம்
பாரில் மண்திரிகை பண்ணுமவன் முதற்றுணை நிமித்தம்
தேரில் மண் மாயையாகத் திரியை தன் சத்தியாக
ஆரியன் குலாலனும்பின் றமைப்ப னிவ்வகிலமெல்லாம்"

(சித்தியார்.)

தேகாதிகளென்றும் ஆத்மாகருமஞ் செய்தலில்லையென்றும் அறிகின்றவன் கருமத்தில் அகருமத்தைப் பார்க்கின்றான். எவ்வாறெனின், நதியில் படகேறி வேகமாய்ப்போகின்றவன் அந்நதிக்கரையிலுள்ள மரங்கள் வேகமாய்ப்போதல்போலத் தனக்குத் தோன்றுதலாலே வேகமாய்ப் போகிற செய்கை ஓடத்திலிருக்கின்ற தன்னிடமிருக்க அஃதுணராது செய்கையற்ற மரங்களிற் செய்கையைப் பார்க்கின்றான். அவ்வாறு தேகாதிகள் செய்யுங் கருமத்தை ஆத்மா செய்வதாகப் பார்க்கின்றான். மரங்களிற் கருமமில்லாமைபோல ஆத்மாவிலுங் கருமமில்லையென்று பார்க்கின்றவன் கருமத்திற் அகருமத்தைப் பார்க்கின்றான், செய்யாமலிருந்தாலும் அகங்காரத்தின் குணமாயிருக்க, அதைத்தான் செய்யவில்லையென்று மூடன் சொல்லுகின்றான். எங்ஙனமெனில் நான் அதைச் செயயாமையாலே சுகியாயிருக்கின்றேன் என்கின்றான். அந்தச் செய்யாமையாகிய அகருமத்தில் "நான் அதைச் செய்யாமையாலே சுகியாயிருக்கின்றேன்" என்னும் அகங்காரத்தில் கருமமிருக்கின்றமையாற் செய்யாமையிலுங்கூட கருமம் அடங்கியிருக்கின்றதென்று விவேகி அறிகின்றான் என்றும் சொல்கிறார் ஆனால் ஆத்மாகர்மஞ் செய்தற்கு அதற்கென்னுள்ளன? கைகால் முதலியனவுண்டோ? அவையில்லாமையால் அது ஒருகருமமுஞ் செய்கிறதில்லை கருமஞ்செய்தல் தேகாதிகளென்றால் ஆத்மாவைப் பிரிந்த தேகம் கருமஞ் செய்யுமோ? செய்யாது இவ்வாறாகக் கருமஞ்செய்வது தேகாதிகளேயன்றி ஆத்மா அன்றென்றாயினும் கருமஞ்செய்தல் ஆத்மா என்றாயினும் சொல்வதிற்கில்லை. ஆனால் சப்தாதி விஷயங்களை இந்திரியங்கள் கிரகித்து மனதில் சேர்ப்பிக்கின்றன மனம் தான் கிரகித்த உடனே புத்தியினிடத்தில் சேர்ப்பிக்கிறது புத்தி ஆத்மாவிடத்தில் சேர்ப்பிக்கிறது என்று சுருதிகள் கூறுவதாலும் 'அன்றறிவாமென்னாதறஞ்செய்க மற்றது பொன்றுங்காற் பொன்றாத் துணை' என்றும் குறளின் விசேட வுரையில் "பொன்றாத்துணை யென்றார், செய்த வுடம்பழியும் உயிரோடொன்றி வினையுடம்பினும் சேறலின்" என்றும் 'ஒருமைக் கட்டான் கற்றகல்வி—யொருவற் கெழுமையு மேமாப்புடைத்து' என்னுங் குறளின் விசேடவுரையில் வினைகள்போல உயிரின்கட்கிடந்து அது புக்குழிப்புகுமாகலின், எழுமையு மேமாப்புடைத்தென்றார்," என்றும் பரிமேலழகர் கூறுதலாலும் ஆத்மாவுக்குக் கருமசம்பந்தமில்லையென்பது பொருந்தாது. ஆத்மாவுக்குக் கரும சம்பந்தமில்லை யென்பது உண்மையானாற் புண்ணியகருமமின்னது பாபகருமமின்னதென்று பகுத்தலேவேண்டா, பகுத்தலாற் பயனில்லை. "அறஞ்செய்து துறக்கம்புக்கான்" என்ற வழி அறஞ் செய்தது யார்? துறக்கம் புக்கதுயார்? செய்தது உடம்பு, புக்கது உயிரென்று கூறுமேலே உணரக்கிடத்தலால் தேகாதிகள் செய்யுங் கருமத்திற்கும் ஆத்மாவுக்கும் சம்பந்தமுண்டென்பது (ஸ்ரீதரசுவாமிகள்) கருத்தும் இவ்வாறே என்பதை மேலே எடுத்துக் காட்டியிருத்தலாலும் அவர் முன்னர்க் கூறுதலாலுமுணர்க, பிராணியானவன் கருமத்தாற் கட்டப்படுகின்றான் என்னும் பிரமாணத்தாற் கருமசுபாவமே பந்தப்படுத்துவதாக விருக்கின்றது. பந்தஞ் செய்வதாகிய கருமத்தை பலாபேக்ஷையில்லாமலும் அகங்காரமற்றும் பகவானுக் கருப்பணஞ் செய்யவேண்டுமென்கிற புத்தியோடு செய்பவனுக்குத் தன் சுபாவமான பந்தத்தைச் செய்யாமற் பூர்வ கருமபந்தத்தையுங்கூட நிவர்த்தித்து மோக்ஷபிரயோசனத்தை யுண்டாக்குகின்றது. ஆதலாற் பந்தரூபமான கருமத்திற் பந்தநிவர்த்தியான அகருமத்தைப்பார்க்கின்றான். அதாவது செய்கிற கர்மமே அகர்மமாகிறது. சோம்பலாலாவது தோஷபுத்தியாலாவது சத்கருமங்களைச் செய்யாது விடுதலே, தோஷத்தையும் பந்தத்தையு முண்டுபண்ணுதலாற் கருமத்தைச் செய்யாது விடுதலாகிய அகருமத்தில் தோஷமாகிய பந்தத்தைக் கொடுப்பதாகிய கருமம் அடங்கி யிருக்கின்

றனவென்றும் கருமத்தை விடாமற் செய்யவேண்டுமென்றும் அறிகின்றவன் அகருமத்தில் கருமத்தைப் பார்க்கின்றான் என்று கூறினார். என் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, மேலேயுள்ளவற்றை யுய்த்து நோக்குங்கள் அவரவர் மனதில் பட்டதைப் பொருத்தமாக பாருங்கள். (தொடரும்.)

நா. அ. தநசாமிராயுடு, போத்தனூர்.

குறிப்பு.—மேலே கூறிய வியாசத்தில் இரண்டொரு விஷயங்களில் சற்று ஐயமுண்டாகக் காரணமிருப்பதாய்த் தோன்றுவதால் அவற்றைப் பற்றி மட்டும் சுருக்கமாய் விவகரிப்பது அவசியமென்று நமக்குப் புலப்படுகிறது. அவை பின் வருமாறு:—

14-வது சூத்திரத்திற்கு ராகவேந்திர சுவாமிகள் நான் பலாபேட்சையின்றி கருமங்களைச் செய்வதால் என்னை யக்கருமங்கள் சாருவதில்லை யென்றும், நான் சீவன்கள் செய்த நல்வினை தீவினைகளை யனுசரித்து சிருட்டியாதி தொழில் புரிவதால் பலவிசித்ர சிருஷ்டி செய்த பக்ஷபாத தோஷம் என்னைச் சாருவதில்லையென்றும் பொருளுரைத்ததாகவும், பாஷியக்காரரும் ஏறக்குறைய அவ்வாறே கூறியிருப்பதாகவும், சங்கராசாரிய சுவாமிகள்,

“ அகங்காரமாவது பலாபேக்ஷையாவது பகவானுக்கில்லாமையால் கர்ம பலன் அவனைச் சாருவதில்லை, தான் பிரம்மமென்பதையும், தான் கருத்தா அல்ல வென்பதையும் உணர்ந்து அகங்காரம், ஆணவம், ஆசை, டம்பம் முதலியனவில்லா திருப்பவனையும் கர்மமணுகுவதில்லை ” என்று கூறியதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

இப்போது மேற்கண்ட விஷயங்களில் ஒன்றைப்பற்றியும் குற்றமாவது ஐயமாவது நாம் கூற வரவில்லை. அவற்றிற்குப் பின்வரும் (நமது நண்பர் கூறும்) கீழ்க்கண்ட வாக்கியத்தாலே வாசிப்போர்க்கு மேற்கண்டவற்றில் இன்னும் ஏதோ விசேஷ அர்த்தம் இருக்கிறது போலும் என்ற சந்தேகம் தோன்றும் என்பதே. அவ்வாக்கியமாவது :—

“ மேலே சுலோகம் 14-ல் என்னைக் கருமங்களடைதலில்லை யென்று காரணங் கூறுமலே அருளியதற்கிணங்க ஈண்டும் இவ்விதமறிந்து என்று 15-வது சுலோகத்திலும் அருளினார். காரணங் கூறுமிடத்துப் பாஷியக்காரர்கள் தத்தம் மதக்கொள்கைக் கிணங்கக் கூறுதலால் காரண விஷயத்தில் இறைவன் திருவுளம் யாதோ? ஆராய்ந்துணர்க ” என்பதேயாகும்.

மேலே கூறப்பட்டவைகளுக்கு மேல் நன்மாய் ஆராய்ந்தறியத்தக்க காரணம் வேறொன்றுமில்லை யென்பதே நாம் கூறவந்தது. ஏனெனில்,

கர்மம் பிறப்பிறப்பை யளிப்பதேனும் அதைப் பலாபேட்சை யின்றிச் செய்வாயாயின் அக்கர்மம் உன்னைச்சாராது என்று அர்ச்சுனனுக்குப் போதிக்கவே கர்மயோகத்தை விரிவாய்க் கூறினாராதலால் தன்னைக் கர்மங்கள் கட்டுப்படுத்தமாட்டா வென்பதற்கு இன்னும் காரணம் அவர் கூறவேண்டுவ தனாவசியம்.

அதற்குப் பாஷியக்காரர் கூறிய காரணங்கள் யாவும் பொருத்தமேயன்றி ஒன்றுக்கொன்று சற்றும் விரோதமானதாய்த் தோன்றவில்லை. எவ்வாறெனின், அவர் பகவானெனினும் தற்சமயம் மனிதாவதாரம் பொருந்தி நம்மில் ஒருவனாய்த் தோன்றி யிருப்பதால் அவர் கருமங்களைச் செய்தாலும் மற்ற மனிதர்க்கு ஒத்ததுபோல் சற்றும் பலாபேட்சையின்றி யாவும் உலக நன்மைக்காகவே கருதிச்செய்வதால் அவரைக் கருமங்கள் சாரவென்பது வெளிப்படை. அவரே பரமாத்மாவாய்ச் சிருஷ்டியாதிகளைச் செய்யும்போது, அப்போதும்

மேல்கூறிய காரணத்தையே பலாபேட்சையின்றி செய்கிறார் என்றும், தன்னிஷ்டப்படி செய்யாமல் ஜீவர்களின் கர்மங்களுக்குத் தக்கவாறு செய்வாராகவும் செய்வதால் கர்மங்கள் அவரைச் சாருவதில்லையென்றும் கூறப்பட்டிருக்கிறதும் ஒப்பத்தகுந்ததே.

ஆயினும் அதில் சங்கரர் கூறியபடி "அவர் எங்கும் நிறைந்த பரமாத்மா, எதிலும் தாக்கற்று ஏகமாய், சலனமின்றி, ஒரு கிரியையுமின்றி யிருப்பவர், உலகில் ஓயாது தன் சந்நிதான மாத்திரத்தில் பஞ்சகிருத்தியமும் நடந்து வந்தாலும் தான் ஒரு தொழிலும் இல்லாமல் சச்சிதானந்த மயமாயிருப்பவர், மேலும் தனக்கு அன்னியம் ஒன்றுமில்லாதவர், *சஜாதி, விசாதி, சுவக்தபேத மற்றவர் தனக்கு வேறாய்ச் சிலரிருந்து ஒருவருக்கொரு மாதிரி இன்னொருவருக்கொரு மாதிரியாய்ச் செய்தாலன்றோ பாரபக்ஷம் உண்டாகும். தனக்கு வேறாய் ஒருவருமில்லை. ஜீவன் மாயா சம்பந்தத்தால் பரமாவினின்றும் தன்னை வேறாய் நினைத்துக் கொண்டாலும் உண்மையில் பல ஏரிகள், குளங்கள், மடுக்கள், குடங்கள் இவற்றிலுள்ள ஜலங்களில் பிரதிபலித்திருப்பது எப்படி ஒரே சூரியனோ அதுபோல் எல்லா தேகங்களிலுமிருக்கும் ஆன்மாக்களும் அவனேயன்றி வேறில்லை. தோட்டியாய் இழிவான வேலை செய்பவனும் அவனே, பிராம்மணனாய் வேதமோதுவதும் அவனே, ஏழையாய்ப் பிச்சையெடுப்பவனும், சகலபோகத்தோடு ஏகசக்கிராதிபதியாய் அரசாள்பவனும், எஜமானனாய்ப் பல்லக்கிலேறிச் செல்வோனும், கூலியனாய் அப்பல்லக்கைச் சுமந்து செல்வோனும் யாவும் தானாகவே யிருந்து ஆனந்தத் திருவிளையாடல்புரிந்து கொண்டிருக்கும் அவனுக்குப் பாரபட்சம் என்ற குற்றம் வர வழியேது, கருமமேது, வினையேது ஒன்றுமேயில்லை." என்பதே சிறந்த உண்மையாகும்.

இன்னொரு விஷயம் எதுவெனில் :—

பின்பாகத்தில் சங்கராசாரிய சுவாமிகள் ஆன்மா கருமம் செய்வதில்லை தேகாதிகள் செய்கின்றன தான் செய்யாத கருமத்தை தான்செய்ததாய் ஆன்மா பாவித்துக்கொள்கிறான் என்று கூறிய விஷயத்தைப்பற்றி நமது நண்பர் எழுதியுள்ளவற்றைப் பார்த்தால் ஆசாரிய சுவாமிகள் குற்றமாய்க் கூறியதுபோலும் நமது நண்பர் அதைக் கண்டித்துக் கூறுவதாகவும் விளங்குகிறது.

உண்மையில் ஆசாரிய சுவாமிகள் வாக்கியத்தில் ஒரு குற்றமுமில்லை. சாதாரணமாய் நமக்கு வெளிப்படையாய்த் தெரிந்திருக்கும் விஷயம் அவருக்குத் தெரிந்திருக்கவில்லையென்று நாம் கருதலாகுமோ. எப்போது அப்படிப் பட்டது நமக்கு முறனாய்த் தோன்றுகிறதோ உடனே நாம் அவர் கூறியதின் கருத்தை நன்குணரவில்லையென்று அறிந்துக் கொள்ளவேண்டும். (தொடரும்)

பத்திரிகாசிரியர்.

---

## ஆலோசியாமை.

எந்த காரியத்தை செய்யப் புகுந்தாலும் முன்யோசனை யில்லாமல் செய்யவாரம்பிப்பது பின்னால் மனோவியாகுலத்திற்கு இடமாயிருக்கிறது. இருந்து யோசிப்பதே திருந்திய முடிவாகும்! ஊக்கத்தை செலுத்தி உழைப்பதே புத்தி

---

* சஜாதி = மனிதனைப்போலவே இன்னொரு மனிதனிருப்பது.

விஜாதி = அன்னியஜாதி புளியமரம்—வேப்பமரம்போல்.

சுவக்தம் = மரத்திலிருந்து பூ, காய், பழம் முதலியவை உற்பத்தியா யிருப்பதைப்போல்.

யாகும். எண்ணித் துணிக கருமம் — துணிந்தபின் — எண்ணுவ மென்பதிழுக்கு இதற்கு ஸமயோசித புத்தியும் இன்றி யமையாததாகும். ஆலோசியாமை அற்ப புத்தியால் ஏற்படுவதாகும். இதற்கு திருஷ்டாந்தமாக ஒரு வைதீகனது செய்தி அறிவிப்பாம்.

ஏழை வைதீக னொருவன் ஒரு தனவானிடஞ் சென்று அரிகதா கால க்ஷேபஞ்செய்யும் ஸமயம் கேட்டுக்கொண்டார். தனவானும் அதற்கு 100 ரூபாய் தருவதாகவும் ஒப்புக்கொண்டான். அன்று மாலை ஏழையும் ஒரு கதை செய்தார். தனவந்தன் இன்று பணமில்லை நாளை இருநூறு ரூபாயாகத் தருகிறேன் என்று சொன்னதின் பேரில் படிச் செலவு செய்து தாமதித்தான் ஏழை. மறுநாள் கேட்டபோது அடுத்தநாள் வந்தால் முன்னூறு தருவதாய் ஒப்புக்கொண்டான். அடுத்தநாளும் வந்தார்; நாளை வாரும் நானூறு ரூபாய் தருகிறேன் என்றார். அதற்கடுத்த நாள் வந்ததும் தனவான் கொஞ்சமேனும் கூச்சமில்லாமல் 100-ரூபாயே கொடுத்தார். இதென்ன ஸ்வாமி! 400-தருவதாய் உத்தரவாயிற்றே என்று வினவினன் ஏழை. அதற்குச் செல்வப் பிரபு அட புத்திகெட்டவனே! நாளை (இங்கு) யிரு 100 ரூபாய் தருகிறேனென்றேன். பிறகு அடுத்தநாள் வா முன் (கூறிய) 100-ரூபாய் தருகிறேன் என்று சொன்னேன். பிறகு நாளைவாரும் நான் நூறுரூபாய் தருகிறேன் என்றேன். நான் ரூ. 100-தருவதாய்ச் சொல்லியதுபோல் தந்திருக்கிறேனே என்றார். செவி சாய்த்த வித்வான் சிரித்துக்கொண்டு அத்துடன் 400 - ரூபாயும் கூட சேகரித்துக்கொண்டு ஒரு வண்டிமாடு வாங்குவதற்காகக் கட்டுச் சாதங்கொண்டு புறப்பட்டு அடுத்த ஊராகிய புராதன புரியிற்சென்று ஒருநாள் கழித்து அடுத்த நாள் காலை வீதி வழிச் செல்லும் ஒரு சிறுவனிடம் பையா! இந்த ஊரில் என்ன விசேஷம்? என்றார். சிறுவன் சிரித்துத் திகைத்து ஐயா! ஒரு விசேஷ மிருக்கிறது. அதாவது இந்த ஊருக்கு மேற்கே ஓர் சிறு குட்டம் (குளம்) இருக்கிறது அதன் கரையிலுள்ள தென்னை மரத்தில் எந்தப் பிராமணனொருவன் ஏறுகிறானோ அவனுக்கு ஒருவராகனும், ஒரு ஸோமனும் இனாமா யளிக்கப்படும் என்றான். இவரை வைதீகனென்றும், பழைய பேர்வழி யென்றும் ஏளனத்துக் கேலி செய்யக் கருதி விளையாட்டாகச் சொன்னான். அப்படியா என்று கேட்டுக்கொண்டு அந்தணன் அந்த மடுவிற்கு சென்று சேறும் நீரும் நிரம்பி யிருப்பது கண்டும் கரையின் மேலுள்ள தென்னைமரத்தில் ஏறினார். ஓர் தடையுமில்லை. சில காய்களும் பறித்தார். இவர் நின்று கொண்டிருந்த பச்சைமட்டையானது இவரைத் தாங்காமல் சரிந்து தொங்கிவிட்டது. ஆனால் பச்சையாகலின் விழவில்லை. பிராம்மணனும் அதைப் பிடித்துக்கொண்டு பிழைத்தோம் என்னும் மைதானத்துடன் தொங்கினார். அச்சமயம் யானைப்பாகனொருவன் தன் யானையைக் குளிப்பாட்ட வந்தான். அவனுக்கு நல்வார்த்தை சொல்லி தன் மடியிலுள்ள ரூ. 500-ஐத் தருவதாய் சொன்னார். ஆதலால் யானைப்பாகன் தன் யானையை நிறுத்தி அதன்மேல் ஏறி நின்று இவரை யானையின்மேல் இறக்கிக்கொள்ள நினைத்து இவர் காலைப் பிடித்தான். பிடித்தானோ இல்லையோ உடனே யானை பீதியுடன் கரைக்கோடிவிட்டது. யானைப்பாகன் "ஐயரே, பத்திரம் மட்டையை விட்டு விடாதீர்" என்று கூறித் தான் அவர் கால்களைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு தொங்கினான். அச்சமயம் தற்செயலாய்குதிரைக்காரனொருவனும் அதை குளிப்பாட்ட வந்தான். அப்போது தன் மடியிலுள்ள 600 ரூபாயையும் தந்து விடுவதாய்ச் சொன்னான் யானைப்பாகன். ஆசையின் மோசத்தால் இவனும் குதிரைமே லேறிகொண்டு குதித்து குதித்து யானைப்பாகன் காலைப் பிடித்தான். உடனே குதிரை ஓடி விட்டது. இப்போது குதி

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.
73



வைக்காரன் முதலாவதிருக்கும் [illegible] “கைவிடாதே! என்னிடமுள்ள ரூபா 700–தருகிறேன் கைவிடாதே! என்றான்; “என்னிடமுள்ள ரூபா 600 தந்துவிடுகிறேன்” என்றான் யானைப்பாகன். உடனே பாப்பான் “ஆஹா! என் மடியிலுள்ள ரூபா 500 ரே பெரிய மூட்டையாயிருக்கிறதே. அவ்வளவுமான ரூபா 1800 மானால் எத்தனை பெரிதாகும், இவ்வளவு பெரிதாகும்” என்று தன் கையைவிட்டு அளவு காட்டிகொண்டான். உடனே யாவரும் குளத்தில் விழுந்தார்கள். அடியிலிருந்த குதிரைக்காரனை சேற்றில் காணவேயில்லை. ஆனைப்பாகனும் அழுந்தினான். பாப்பானும் பரிதபித்தான். ஒருவருக்காவது முன்யோசனை யென்பதிருந்தால் இப்படி நேர்ந்திரா. அதிலும் அந்தப் பிராமணர் மூளை யென்பதே நாஸ்தியாகிவிட்டது. பொறுமையுடனே ஆலோசியாமையே காரணமாகும். சுபம்.

இ. வே. மஹாதேவ பிள்ளை, இலத்தூர்.

---

## நல்லொழுக்கம்.

சகோதரர்களே!

நமது ஆனந்தபோதினி பூ உலகத்தில் வெளித்தோன்றி, சகோர சகோதரிகளுக்குப் பல அரிய விஷயங்களைப் புகட்டுவதில் முன்னுக்கு வந்திருப்பதைப் பற்றி, இது ஒரு அவதாரபுருஷனென்றே மதிக்கலாகும்.

ஆதலால், இது நாம் நீடூழிவாழ்கவென்று பகவானைப் பிரார்த்திப்போமாக, நாமும் நம் சிற்றறிவிலடங்கிய சிற்சில விஷயங்களை வரையத் துணிந்தனம்.

1. நாம் செய்யும் எந்தவிஷயத்திலும் நமது மனதை எது தீமை எது நன்மை யென்று விசாரித்து அந்தந்த காரியங்களைச் செய்தல் உத்தமம். அப்படிக்கின்றி தியவழிகளிற் பிரவேசித்தால் தற்கால நன்மையும் பின்னால் நம் சுகத்துக்கு நீடித்த விரதத்தையும் உண்டாக்கும்.

2. “இட்டாதாயின் வெட்டனமற” என்ற முதுமொழியின் பிரகாரம் நம்மால் முடியாத காரியத்தை சொற்பனத்திலும் நினைக்கவேகூடாது. அப்படிக்கின்றிப் பிரவேசித்தால் அதிக பணம் விரயமும் அதிக பிரயாசையும் ஏற்பட்டு மூளைக்குக்கெடுதியை விளைவிக்கும். பிறகு மலையைத்தோண்டி எலியைப் பிடித்தால்போலாகும்.

3. நமக்கு திடீரென்று வரும் கஷ்டத்துக்கு அதிக விசனத்தை யடைதல் கூடாது. நம்மால் என்னசெய்யமுடியும் வருவது வந்துதான்தீரும் வரும் விதி வழியில் தங்காது ஊழ்வினையின் வலியை யாரால் தடுக்கமுடியும் என்று நம் மனதை விசாரித்து மனமகிழ்ந்திருத்தல் நன்று. அப்படிக்கின்றி விசனத்துக்கு இடம் கொடுத்தால், இனிமேல் நடக்கவேண்டிய காரியங்களுக்கெல்லாம் விக்கினமும், பயித்தியமும் ஏற்படும். இதில் பொறுமை அவசியம்.

4. பொறுத்தவர் பூமியாள்வார், பொங்கினவர் காடாள்வார் என்றவசனத்தின் பிரகாரம் எந்தக்காரியமும் ஆத்திரப்படாமல் பொறுத்து நிதானித்து மனதைத் தேற்றி இது செய்யவேண்டும் இது செய்தல்கூடாது என்று விசாரித்து காரியத்தை முடிவுசெய்தல் நன்று. அப்படிக்கின்றி ஆத்திரத்துடன் வேலையைச் செய்தால், ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு என்ற வசனத்தின் பிரகாரம் ஒன்றுக்கிரண்டாய் கெட்டுபோவோம்.

5. முனிவுவந்தால் நாம் ஏன் கோபம் செய்யவேண்டும் தெரியாமலொருவன் செய்துவிட்டான் இதற்கு நாம் கோபத்துக்கு இடம்கொடுக்கக்கூடாது கோபம்

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY

பொல்லாதது என்று இஞ்சிற்று மனதைச் சாந்திப்படுத்தி மனதைத் திருப்புதல் நன்று.

நண்பர்களே! நம்மில் சிலர் வேணுமென்றே கோபத்துக்கு வழியேற்படுத்தி பக்கத்தில் நிற்கும் பெண்கள் நம்மை மதிக்கட்டும், என்று அகங்காரம் கொண்டு கோபத்துக்கு ஓர் நல்வழியை யேற்படுத்திவிடுகிறார்கள். அந்தோ! இவர்கள் எல்லாருக்கும் சத்துருவாகி முடிவில் தம் ஆன்மாவுக்கு அழிவு ஏற்படுத்தி விடுகிறார்கள் இவைகளில் நான் என்ற அகங்காரம் கூடாது.

6. "ஏழையாயினும் தாழவுரை" என்ற முதுமொழியின் பிரகாரம் நாம் எல்லா ஏழைகளிடத்திலும் அன்பும் இரக்கமும் காட்டுதல் நன்று. நாம் இழ் வருணத்தோரிடமும் முகமலர்ச்சியுடன் பேசுதல் நன்று அவர்களிடத்தில் அன்பும் தயையும் முக்கியமாய்க்காட்டவேண்டும். தம்மிடத்தில் பேசவருவோர்களை முகமலர்ச்சியுடன் கண்பார்வையினால் வருக, வருக, என்ற உபசாரம் காட்டுதல் நன்று. அவர்களும் மனமகிழ்ச்சியோடு உரையாடி இரண்டுவார்த்தையில் முடிவாகும் மொழியானது கூட 10-20 வார்த்தைகளுக்குமேல் முடிவு செய்வார்கள். அவர்கள் தம்மிடமின்றி அகன்றபொழுது வேறொருவனிடத்தில் இவனைப்பற்றி புகழ்ந்துபேசுவதில் கண்ணும் கருத்துமாயிருப்பார்கள். ஆதலால் இவர் எல்லாராலும் புகழப்படுவதற்குக் காரணமாகும்.

7. பரஸ்திரிகமனம் இவை சொற்பனத்திலும் கருதாது இருத்தல் நன்று. இது பஞ்சமாபாதங்களில் ஒன்றாகும் அந்தோ? இப்பாவிகள் சரீர சுகத்துக்கோர் இழிவும் மறுமையில் நரகப்பிராப்தியும் தேடிக்கொள்கிறார்கள். அவ் யமன்பக்கம் நெருங்கவிடாமல் ஜாக்கிரதையாய் பாதுகாத்தல் நன்று.

ஓர் அன்னிய ஸ்திரீ அழகுடன் நம்முன் தோன்றினால் பிரமைகொள்ளாமல் முதலாவது ஏரெடுத்துப் பார்க்காமல் இருக்கல்வேண்டும். பக்தவிஜயத்தில் ஆதமராம் தன் மகன் துளசிதாசருக்குப் புகன்ற வாக்கியம் பின்வருமாறு.

"பார்த்தெனதருள்குமார பரசுகமடைந்த தூயோர்
எத்திடுங்கண்ணே பெண்ணுவிப்படி யலையலாமோ
ஊத்தையும்முதிரஞ்சிய மொழியிடு புண்ணுந்தோலை
நாற்றமென்றகற்றிடாதே நண்ணிடலாமோ வென்றான்.

குடல்வழும் பென்புந்தோலுங் குருதியுநரம்பிறைச்சி
கொடுமலசலமுமீன்க கோழையுங் கொழுப்புமுற்றுச்
சுடுபிணமணத்திற் கெட்டதார்க்கந்தம் வீசாநின்ற
மடந்தை மீதாசையாதல் வனமதோ மகனேயென்றான்.

என்ற மேல்சொன்ன வசனத்தின் பிரகாரம் சீ யென்று வெறுத்து நீக்குதல் நன்று. நண்பர்களே, பரஸ்திரீயின்பேரில் ஆசைவைத்தல் நன்றல்ல. இவ் வாசையை பரமாத்மாவாகியும், பரஞ்சுடருமாகியும், எம்பெருமானுகியும், கைலையங்கிரி வாசஸ்தனுகியும், மனதுக்கு எட்டாதவஸ்துவுமாகி நின்ற சிவபெருமானிடம் வைத்துத் தியானிப்போமாயின் இப்பாசபந்தக்கடலை எளிதல் தாண்டி பிரம்மானந்தத்தில் மூழ்கியிருப்போம்.

மங்கையர்தம் மேல்வைத்தக் காதல்தனை யூறு
பங்காக்கி யதிலோர் பங்கெடுத்து—கங்கையணி
வேணியன் பாதார விந்தத்தில் வைத்தக்கால்
பூரணுந் சுதிகா ணைலாம்.

(வள்ளலார்)

M. T. நஞ்சேகவுண்டர், மேரி.

## மாணவர் பக்கம்.

### * சாந்தமென்பது பலஹீனமல்ல.

"அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாம்" என்பது பழமொழி. எந்தக் காரியத்திலும் அளவுக்கு மிஞ்சி நடப்பது வெகு இலகுவானாலும் தீயதே. எந்த நற்குணத்தையும் அதிக தூரம் உபயோகிக்கப்புகுந்தால், அதுவே துர்க்குணமாகும். உதாரணமாக, சிரமப்பட்டு படிப்பது நல்லதுதான். ஆனால் அதிக தூரம் கொண்டுபோய், அதை அக்ரமமான முரட்டுப்பிடிவாத மாக்கிவிடலாகாது. புஷ்பங்களிடத்தும் மரஞ் செடி கொடிகளிடத்தும் அபிமானம் மிக நல்லதே. அவைகளை நன்றாய்ப் பரிபாலிப்பது அவசியமே. ஆயினும், எப்போது பார்த்தாலும் தோட்டத்திலேயே உட்கார்ந்துகொண்டு மற்ற முக்கிய கடமைகளைக் கவனியாதிருத்தல் உதவாதல்லவா? நமது வாழ்நாளில் எல்லாவிதமான வேலைகளும் கடமைகளும் நிறைந்துள்ளன என்பதையும், அதற்கேற்ற, நேர் நிறையான குணங்களோடு கூடியவர்களாய் நாமிருத்தல் வேண்டுமென்பதையும் நன்கு ஞாபகத்திற் கொள்ளவேண்டும்.

"என்ன ஐயா இது! அளவுக்கு மிஞ்சி சாந்தமாயிருந்தால் அதனின்று எப்படி தீமை விளையக்கூடும்? என்று பலர் சந்தேகிப்பார்கள். முற்றிலும் சாந்தமாயிருப்பதாக எண்ணங்கொண்டு, பிறர் விஷயத்தில் தலையிடுவானேன் என்று பலர் பேசாமலிருக்கிறார்கள். பிறருக்கு அவர்கள் உதவியும் செய்கிறதில்லை, கெடுதலும் செய்கிறதில்லை. இப்படிச் சும்மாவே தனித்திருப்பதால், தைரியம் குறைந்தவர்களா யிருக்கிறார்கள். தைரியம் குறைந்தவர்கள் தொந்தரவுகள் வரும்போது பலஹீனத்தால் பின்வாங்குகிறார்கள். இத்தகையவர்களைத்தான் கோழை மனத்தவர் என்று சொல்லுகிறோம். பிறர்மனத்தை எங்கு நோகச் செய்துவிடுவோமோ என்று நினைத்து, பிறரிடம் போய் ஆகவேண்டிய காரியங்களில் இவர்கள் முயற்சிக்கிறதே யில்லை. ஆகையால் பொறுப்பான வேலைகளை இப்படிப்பட்டவர்களிடம் ஒப்புவிக்கக் கூசுகிறோம். எல்லாவற்றிலும் அதிக சாந்தமாகவே இருப்பதால், இவர்களிடம் தாமஸபுத்தியும், கோழை மனமும்தான் அதிகமாயுள்ளன. புத்திக்கூர்மையும் பரபரப்பும், திடசித்தமும், சாந்தத்தைப்போலவே அவ்வளவு அவசியம் என்பதை இவர்கள் மறந்துவிடுகிறார்கள். முதுகெலும்பு இல்லாதவர்களைப்போல், பயந்தவர்களா யிராதீர்கள். எந்த அக்கிரமத்தையும், தவறுகளையும், குற்றங்களையும் ஒழித்து சீர்திருத்துவதில் தைரியமாயிருங்கள். பலஹீனமுள்ளவர்கள் எல்லாவற்றிலும் பிரியங்கொண்டபோதிலும் அவைகளைப்பற்றிய முக்யமான உள் விவரங்களையும் கூடக் கவலை உதவாதென்று தவிர்ப்பார்கள். சிரமமாயிருந்தாலும் அவைகளை எப்படியும் அறியவேண்டும் என்ற ஆவல் இவர்கட்கில்லை. இதெல்லாம் சாந்தமாகா. சாந்தமென்பது மந்தமாயிருத்தல் அல்ல. அது ஒருபோதும் பலஹீனமல்ல.

பலசாலிகளா யிருப்பவர்கள் சாந்தமாயிருப்பது சிரமமென்று உங்களுக்கொருவேளை தோன்றலாம். ஆனால் அப்படியல்ல. உங்கள் பலத்தைத் தவறான வழியில் உபயோகித்துவிடுகிறீர்கள். அது பிழையே. பலசாலிகள்தான் சாந்தமாயிருக்கக்கூடும். பட்டணங்களில் வழிதப்பி அலறும் சிறுகுழந்தைகளைப் போலீஸ்காரன் எவ்விதம் வைத்துக்கொண்டு, அதை சமாதானப்படுத்தி நல்ல கதைகளைச்சொல்லி ஏதாவது தின்பண்டம் வாங்கிக்கொடுத்துப் பிறகு விசா

* இது நியூஸிலண்டு ஸ்வர்ணமாலைப் பத்திரிகையிலிருந்து பூர்ண சந்திரோதயம் பத்திரிகையில் வரையப்பட்டது.

ரித்துப் பெற்றோர்களிடம் ஒப்புவிக்கிறான் உங்களுக்குத் தெரியுமா? எவ்வளவு மெதுவாய் அக்குழந்தை கையைப்பிடித்துச் செல்லுகிறான்! எவ்வளவு பிரியமாய் அதோடு பேசிக்கொண்டு, கண்ணைத் துடைக்கிறான் பார்த்திருக்கிறீர்களா? இதுதான் சாந்தம். ஏனெனில் அவன் தன்பலத்தைத் தனக்குள்ளே அடக்கிவைத்துக்கொண்டு, வேண்டிய அளவுமட்டும் உபயோகிக்கிறான். உங்கள் பலத்தை அறிவோடும் அன்போடும் உபயோகிப்பதே சாந்தம் என்று அறிக.

வழவழவென்று இருப்பவர்களைச் சாந்தர்கள் என்று நினையற்க. அவர்களிடத்தில் உண்மையான சாந்தம் இல்லை. நீங்கள் சாந்தர்களாயிருக்கவேண்டுமானால், பலமுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். கிருஷ்ணபகவான் பாலர்களிடத்தில் மிகப்பிரியமாயிருந்தார். எப்படி? அவருடைய போதனையும் பலத்தையும் பாலர்களைப் பயமுறுத்துவதில் உபயோகித்தாரில்லை; அப்பாலர்களுக்கு உபகாரம் செய்வதற்கே தம் பலத்தையும் போதனையும் உபயோகித்தார்.

ஆஸ்பத்திரிகளில் வியாதியாகக் கிடப்பவர்களுக்கு வைத்தியம் செய்பவர் எவ்வளவு சாந்தமாயிருக்கிறார்! அவர் முரட்டுத்தனமாக ஒன்றும் செய்வதில்லை. கடிந்து ஓர்வார்த்தை பேசுவதும் இல்லை. வியாதியால் நொந்து மெலிந்திருக்கும் சரீரத்தை வெகு சாவதானமாயும் மெதுவாயும் தூக்குகின்றார். அவருடைய அமைதியான நன்மாதிரிகளும் வேலைத்திறமும் வலியை ஆற்றி வியாதியைத் துறத்துகின்றன அல்லவா? அவர் எத்தனையோ புஸ்தகங்களையும், எத்தனையோ சாஸ்திரங்களையும் படித்திருக்கிறார். சாமானியர்களைக் காட்டிலும், வியாதிகளையும், அவைகளின் சிகிச்சை முறைகளையும் நன்கு அறிந்தவர். அதனால்தான் அவ்வளவு நன்மைசெய்ய அவருக்கு இயலுகின்றது. அவருக்கு அறிவின்பலம் இருக்கிறபடியால், அதை உபகாரமானவழியில் செலுத்துகிறார். அவருடைய சாந்தம், அன்பு, தன்னடக்கம், அறிவு இம்மூன்றினாலுமல்லவா ஏற்பட்டது? நீங்களும் சாந்தமாயிருக்கவேண்டியவர்கள்தான். அவ்விதமிருப்பதற்கு, பிறருக்கு உபகாரம் செய்ய ஆவலோடிருத்தல்மட்டும் போதாது. அறிவோடு உபகரிப்பது எப்படி என்பதையும் கற்றுக்கொள்ளவேண்டும்.

S. V, பழனியப்பன், சாலியாபாளையம் துப்பம், கரூர் தாலூகா.

---

## ஸ்திரீகள் பக்கம்

### ஸ்திரீகளின் சுபாவமும் நிலைமையும்.

ஸ்திரீகளின் நிலைமையைக் குறித்து எழுதும் முன் அவர்களது சுபாவத்தைக் கவனிப்பது அவசியமாகும். அவர்களது சுபாவமே தெரியாவிட்டால் சரியான நிலைமை இன்னதென்று நிச்சயிக்க முடியாது. அது சில விஷயங்களில் நல்லதாகவும் இருக்கிறது.

" பேய் கொண்டாலும் கொளலாகும்
பெண் கொள்ளலாகாதே "

என்ற சிவப்பிரகாச சுவாமிகளின் வாக்கே பெண்களது கெட்ட சுபாவத்தைக் காட்டப் போதுமான ஆதாரமாக இருக்கிறது. பெண்களது கொடுமை பேய் கொடுமையிலும் கொடியது. ஒருவேளை பேயைக் காட்டிலும் பெண்கள் கொண்டவனை ஆட்டி வைப்பார்கள் போலும்.

வீடுகள்தோறும் நடக்கும் சண்டை சச்சரவுகளுக்குப் பெண்மணிகளே காரணம். புறங்கூறும் வழக்கமும் பொறாமைக் குணமும் அவர்களை விட்டும் நீங்

குமோ? ஊரிலிருப்பவர் நடத்தையை வீட்டினுள் இருப்பவள் கவனிப்பானேன். கவனிப்பினும் பிறரிடம் சொல்லாவிட்டால் வாயாறுதோ? அடுத்த வீட்டுக் காரி நல்ல நகை பெற்ருல் தனக்கு வயிரொரிய வந்த கேடென்ன!

பெண்களின் மனம் மிகக்குறுகியது. அறச்செட்டுக் காரிகள், புருஷனே ஏதாவது ஒரு சமயத்தில் இதஞ்சொல்லி தாட்சணியப்பட்டு ஒருவருக்கு சாப்பாடு போடச் சொன்னாலும், அவனைச் சும்மா விடுகிறதில்லை; ஓட்டோடும்படி வைக்கிறார்கள்.

இவர்களது பேராசையையும், வம்பையும் பிடிவாதத்தையும் விரிக்கில் பெருகும். பிறர் என்ன கஷ்டப்பட்டாலும் தன் கை நிறம்பினால் சரி என்பவர்கள். நினைத்த காரியத்தை நிலையில் சாதித்துக்கொள்ளுகிறவர்கள். குடும்பத்தில் வருவாய் குன்றினால் பெண்கள் புருஷனையும் மதியார்கள்.

இதுகாறும் பெண்களது கெட்ட சுபாவத்தைக் குறித்து சிறிது எழுதினோம். இனி அவர்களது நற் சுபாவத்தைக் குறித்துச் சிறிது எழுதலாம்.

ஸ்திரீகளது நற் சுபாவத்தை ஆராய, அது கொஞ்சம் அல்ல. ஞாபக சக்தியில் பெண்களை வெல்லுபவர் யாருமில்லை. அவர்கள் வெகு காலத்திற்கு முன் நடந்ததை இப்பொழுது நடந்ததைப் போல் வெகு ஞாபகத்துடன் தெளிவாகச்சொல்லுவார்கள். ஒவ்வொருவரும் தாங்கள் தாங்கள் வெவ்வேறு குழந்தைகளைப் பெற்ற பலமாதம் தேதிகளையும் தனித்தனியாகத் தங்கள் தங்கள் இளம் பருவத்தில் கேட்டபோதிலும் குறிப்பாகச் சொல்லுவார்கள்.

அவர்களது மதிநுட்பம் மிகக் கூரியது. பிறர் நோக்கம் இன்னதென்பதை எளிதிலுணர்ந்து வசீகரிப்பார்கள். மதுரவசனிகளின் கட்டுரைவன்மையும், சாந்துரைகணக்கும், ஆடவரின் மனத்தை வசையச்செய்யும். அவர்கள் வெ[illegible] தந்திரமாகவும், இனிமையாகவும், நயமாகவும் பேசும் ஆற்றலுடையவர்கள். வெ[illegible] வேறு விதமான சாப்பாடு, கறிவகை பட்சணங்களுக்கு சுவை கூட்டுவ[illegible] பெண்களன்றி ஆடவர் துணிந்தால் தோல்வியடைவார்கள்.

பணம் சேர்ப்பதில் பெண்கள் சாமர்த்திய முடையவர்கள் என்பதும் மிகையாகாது. சிறுகச் சிறுக ஆடவர் பணத்தைத் திருடித் திருடிச் சேர்த்தே அவ்வாடவர்களுக்கே அண்டை வீட்டு இரங்கம்மாவிடம் கடன் வாங்கிக்கொடுப்பதுபோல் கொடுத்து, "ஐயோ அவள் புருடனுக்குத் தெரியாதபடி சீக்கிரம் கொடுத்துவிடவேண்டுமே" என்று பாசாங்குக் கூறி வட்டிபோட்டு வாங்கிவிடுவார்கள். புருஷனையும் அதிகச் செலவு செய்யக் கண்டால் கண்டனம் செய்கிறார்கள்.

"மனைகாக்க மாண்டமகளிர்"

என்றபடி மனைக்குச் செல்வம் மாட்சிமை யுடைய மகளிராகும். பெண்ணில்லா வீட்டில் இலட்சுமி தங்காள் என்பது உயர்வு நவிர்ச்சியணி அன்று. பெண்க ளில்லா வீடு எப்பொழுதும் பாழே. அவ் வீடுகள் அசுத்தமாகவே இருக்கும். அதிதிகளை ஆதரிக்க வழியிராது. அவ்வீட்டாடவரும் விசனகரமாகவே இருப்பார். பொழுது விடியுமுன் சமையல் துவக்கும் வேலையின் கவலை அவ்வாடவர்களுக்கு உண்டாய்விடும்.

ஆடவர்களிட மில்லாத குணங்கள் பெண்களிடமும், பெண்களிட மில்லாத குணங்கள் ஆடவரிடமும் அமைத்தே கடவுள் இரு பாலரும் ஒன்றியே குறைவு நிறைவுகளைச் சீர்படுத்திக் கொள்ளும்படி சிருஷ்டித் திருக்கிறார். ஆடவர்கள் விசால மனமுடையவர்கள், அதிகச் செலவுசெய்பவர்கள், வெள்ளைத்

தனமாய்ப் பேசுபவர்கள், தைரியசாலிகள், மெய்மறதியோடு கூடியவர்கள்; பெண்களோ, குறுகிய மனமும், மிகச் செட்டும், வஞ்சகமும், பயமும், ஞாபக சக்தியும் இவை போல்வனபிறவும் உடையவர்கள்.

பெண்களே ஆடவர்களைக் காட்டிலும் முக்கியமானவர்க ளென்பதற்கு பின்னும் அநேக ஆதாரங்களுள. குழந்தைகளுக்குப் புத்தியும், நடத்தையும், சிறு பிராயத்தில் தாய் மூலமாகவே உண்டாகிறது. தாயிடமே குழந்தைகள் 7 வயது வரையில் தங்கி இருக்கிறது. இளமையிற் கற்பனவே ஆழமானவை களும் ஸ்திரமானவையும் ஆகும். தாய் நல்ல சுபாவமுடைய வளல்லாவிடின் குழந்தைகளின் நடத்தை ஆயுசுவரையில் கெட்டுவிடும். 7 வயதுக்குப் பிறகே படிக்கவைப்பதுமுதல் தகப்பன் வேலை தொடங்குகிறது. சற்று ஸ்திரமான புத்தியைக் குழந்தைகளின் ஏழு வயதுக்குப் பிறகு திருப்புவது கஷ்ட சாத்திய மாகும்.

பெண்களது முக்கியம் தோன்றவே கடவுளும் பாலைத் தாயின் மார்பகத்தே வைத்துள்ளார்.

மேலும் பெண்கள் தங்களது ஆயுசுக்குள் அநேக பருவங்களில் அநேகவித மாக நடந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஒருவருக்கு மனைவி யானவுடன் அவரிடம் நடந்துகொள்ள வேண்டிய விதம் தெரிந்து கொள்ள வேண்டியவளாயிருக்கிறாள். மிருகத்தைப் போலிருந்தால் அவர்களுடன் ஒத்து நடப்பது கடினமாகும். அப்பொழுது, பிறந்த இடம்விட்டுப் புகுந்தவிடம் போவ தால் இடம் வேறும், பழகின மனிதர்களை விட்டுப் புதிய மனிதர்களிடம் பழக வேண்டி யிருப்பதால், பழக்கம் வேறாகவும், ஆகவேண்டி யிருக்கிறது. மாமன் மாமியார் இவர்களிடம் கீழ்ப்படிந்து அவர்களைத் தகப்பன், தாய்போல் பாவிக்க நீங்க வேண்டியவர்களாகிறார்கள்.

உபய இத்துடன், குழந்தை பிறந்தவுடன் தாயார் வேலையையும் சேர்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. குழந்தைகளின் தேகசவுக்கியத்தைப் பாது காத்து, அறிவு, நடத்தை முதலியவைகளைக் கற்பிக்க வேண்டியவர்களாக இருக் கிறார்கள்.

குழந்தைக்கு மணம் முடிந்தவுடன் மாமி வேலையும் சேர்ந்து விடுகிறது. அந்தோ! பெண்கள் குறைந்த அறிவு உடையவர்களாக இருப்பின் எப்படி மருமகளை மகளைப்போல் பாதுகாப்பார்கள்.

இத்தனைய வேலைகளின் மாறுதல்களும், இடம்மாறுதல்களும், பழக்க மாறுதல்களும், ஸ்திரீகளுக் கன்றி ஆடவர்களுக்கு அமைந்து கஷ்டப்படுத்துவ தில்லை. ஆகையால் ஸ்திரீகள் மிகவும் நற்சுபாவ முடையவர்களாக இருத்தல் வேண்டும்.

தொடரும்.

R. திருவேங்கடம் பிள்ளை, மிராசுதார், இராஜேந்திரம்.

---

## மாதரொழுக்கம்.

சகோதரிகளே!

முன் நமது வியாஸத்தின் கண் ஸ்திரீகளின் தர்மத்தைப்பற்றி விவரித்துக் கூறினோம். தற்பொழுது ஸ்திரீகளின் ஒழுக்கங்களையும் லக்ஷணங்களையும் அவர்கள் அறியவேண்டியவைகளையும்பற்றி சிலது கூறுவோம்.

சிருஷ்டியில் புலவந்துள், ஆதறிவும் ஆத்மசையமும் புருஷார்த்தமும் பெறத்தகுந்த மாவிடஜன்மமும், அஜ்ஜென்மத்தில் தர்மார்த்த காமமோக்ஷ

மென்கிற பதங்களால் முறையே அர்த்தத்தினால் தர்மமும் அபேக்ஷையால் மோக்ஷமும் பெற இல்லறமுமே ஏற்ற தானமாய் இருக்கிறது. இத்தகைய மேன்மைபெற்ற இல்லறத்தை அலங்கரிக்க நல்வில்லறக்கிழத்தியும் வேண்டி இருக்கிறது. அத்தகைய மங்கையானவள், நம் ஔவைப்பிராட்டியார் அருளிய அமுதவாக்கைப்போல் கற்பிற்சிறந்தவளாயும் நற்குணமுடையவளாயும், ரூபமுடையவளாயும், நற்ஸஹோதரர்களை உடையவளாயும், டாம்பீகம் இல்லாதவளும், குடித்தனப்பாங்கை அறிந்தவளாயும் இருக்கவேண்டும். அதுவுமல்லாமல் வரவிற்குத் தகுந்த செலவு செய்யவும், தனக்கு ஆண்டவனால் அன்புடன் கொடுக்கப்பட்ட மக்களைப்பெரிதும் நல்வழியில் பயிலுவிக்கவும் கல்வி இன்றியமையாச் சாதனமாய் இருக்கிறது.

ஆனால் சில ஸஹோதரிகள் புருஷர்களைப்போலவே தாங்களும் F.A. B.A. L.T. M.B C., முதலிய பரிக்ஷைகள் பாஸ்செய்து (Degree) கள் வாங்கினால்தான் கௌரவம் என நினைக்கிறார்கள். அந்தோ ! இது மிகவும் பரிதாபகரமானது !! ஏனெனில் ஜீவனத்தின் பொருட்டு புருஷர்கள் பாஸ் செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். பெண்களோ வென்றால் தகுந்தபடி குடித்தனம் செய்யவும் வேலைசெய்து களைத்துவரும் தன் நாயகனுக்கு தகுந்தபடி பணிவிடைகள் செய்யவும் வீட்டைச் சுத்தமாகவும் ஆரோக்யமாகவும் வைத்துக் கொள்ளவும், மக்களுக்குத் தகுந்த கல்வி கற்பிக்க அறிதலும் போதுமானது.

ஆகையால் இவர்கள் அறிந்துகொள்ளவேண்டிய கல்வியும் தெரிந்து கொள்ளவேண்டிய மாதிரிகளுமே வேறுவிதமாய் இருக்கிறது. நல்விதைகளாய் இருந்தபோதிலும் எவ்வாறு நல்ல நிலத்தில் விதைத்தால்தான் செழுமையாய் விளைகிறதோ அதுபோல் கல்வி நன்மையுள்ளதாய் இருந்தபோதிலும் நல்வழியில் அதை உபயோகிப்பதே மேன்மையாகும். குழந்தைகளுக்கு வரும் சில்லரை வியாதிகளைத் தடுக்கவும் தகுந்தபடி ஔஷதங்கள் கொடுக்கவும் பெண்கள் கற்றுக்கொள்ளவேண்டும். மற்றும் வியாதியஸ்தர்களுக்குத் தகுந்த சிகிச்சை செய்யவும் அறிந்திருக்கவேண்டும். இவ்வாறு பயனுள்ள கல்வி கற்றிருந்தால் ஒழிவு நேரங்களில் பொழுதை வீணேபோக்காமல் பயன்பெறச்செய்யலாம். நற்கல்வி பயில்வதுமல்லாமல் தங்களின் கடமையையும் நன்கறிய வேண்டும்.

மஹாமதியூகியும் ஸர்வகலையிலும் வல்லவியுமான ஸகுந்தலையைக் கண்வ மஹாரிஷியானவர் துஷ்யந்தன் மனைக்கனுப்பும் கால் "ஹே ஸகுந்தலா நீ மஹா புத்திசாலியாய் இருந்தபோதிலும் உன் புருஷன் வீட்டில் நடந்துகொள்ள வேண்டிய விதிகளைப் பிதாவான என்னால் செவ்வனே அறிந்துகொள்ள வேண்டியவளாய் இருக்கிறாய். உன் புருஷன் மனையில் அநேகம் ஏவலாளர்களும் காவற்காரர்களும் இருப்பார்கள். அவர்களை பக்ஷமாகவும் தயவாய்த்து நடத்தி நல்ல எஜமானி எனப் பெயர் எடுப்பாயாக. பெரிய ராஜவம்சத்தவராகையால் அநேகம் ஓப்படியாள்களும்மாமிகளும் இருப்பார்கள். அவர்களிடம் அதி லக்ஷி[illegible]வும் வணக்கமாகவும் நடந்துகொள்வாயாக. பெரிய சக்ரவர்த்தியாகையால், எதோருக்கு அநேகம் பட்ட மஹிஷிகளும் ஸ்திரீகளும் இருக்கக்கூடும். அவர் மாய நன்மை செய்துகொண்டும் துவேஷமும் அஹங்காரமும் பாராட்டாமலும் செய் நன்மேல் கோள் புராணங்கள் சொல்லாமலும் ஸஹோதரிகளைப்போல் நேசிக்க வேண்டும்" என்று பலவாறாகப் புத்திமதிகள் கூறியதாக ஸகுந்தலா நாடகத்தில் விரிவாகக் கூறி இருக்கிறது. மஹா உத்தமியான ஸாவித்ரியானவள் விவாகமாய்த் தன் பர்த்தாவீடு செல்லுங் காலையில் அவர்கள் வனவாஸிகளாய் இருந்தமையால் தன் ஆடை யாபரணங்கள் முதலியவற்றைக் கழற்றி மரவுரி

பூண்டதைக்கண்ட மத்ராதிபன் "ஹே ஸுகுமாரி ஸர்வவஸ்த்ராபரணலங்க்ருதையாய் சோபிஸையாய் இருக்கும் நீ யாதுகாரணத்தால் மரவுரி பூணத்துணிந்தாய் என்று கேட்க; மிகுந்த அறிவுடைய ஸாவித்ரியானவள், "ஐயனே அவர்கள் வனவாஸிகளாய்ச் சுகமற்று மரவுரி தரித்திருக்குங் கால் நான் பட்டுவஸ்திரம் தரிப்பது அழகன்று. எவ்வளவு தனிகன் செல்வியாய் இருந்தபோதிலும் கணவன் வீட்டில் எப்படி இருக்கிறார்களோ அப்படித்தான் இருக்கவேண்டும். பெண்களுக்குப் புகுந்த அறமே சிறப்பு ஒழிய பிறந்த அறம் சிறப்பில்லை. எந்த மங்கையானவள் கணவனுக்கிணங்கி நடந்து பெரியோர்கள் அனுக்கிரஹத்திக்குப் பாத்திரையாகிறாளோ அவளே இருகுலத்தையும் சிறப்பிப்பவளாவாள்." என்று ஸாவித்ரி கூறியதாக புராணத்தில் கூறி இருக்கிறது. தன் கணவன் வீடுசென்ற பின்பும் மிகச் செல்வமாய்வளர்ந்த ஸாவித்ரியானவள் மிக ஒழுங்காய் வீட்டுவேலைகள் செய்து குருடான மாமி மாமனுக்குத் தொண்டுசெய்து பெரியோர்கள் அனுக்ரஹத்தைப்பெற்று தெய்வ ஆராதனை விரதங்கள் செய்து தன் பர்த்தாவின் உயிரை மீட்டுக்கொண்டு வந்தாள் என்றால் அத்தகைய மஹா உத்தமியின் கற்பு அளவிடற் பாலதன்றோ? இன்னும் சரித்திரங்களில் கூறிய அனேகம் உத்தமிகளின் கற்பின் மஹிமையை வாசிக்குங்கால் வியப்பும் அவர்களின் மனோவல்லமையும் ஊக்கமும் தெள்ளற விளங்குகின்றது. ஆகையால் ஸ்திரீகளாய்ப்பிறந்த நாமெல்லோரும் தெய்வபக்தி குருபக்தி தேசபக்தி பெற்றோர் பெரியோர்களிடத்து பக்திகளிற் சிறந்து விளங்கி மேன்மையடைய ஸர்வேசுவரன் அருள்புரிவாராக.

ஓர் ஸஹோதரி.

---

## கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை

(36-ம் பக்கத் தொடர்ச்சி)

" கரணேஷு மந்த்ரீ " யோசனையிலோ ;

ஓர் அமைச்சன் அரசனருகிலிருந்து, இராச்சியம் நிலைத்தும் செழித்தும் இருக்கவும் மன்னனுக்குப் புகழும் வெற்றியும் உண்டாகத்தக்க காரியங்களை யோசித்து இயற்றுவதற்கு இறைவனிடம் சம்பாஷித்து, மன்னனது மயக்கத்தை யெப்படிக் களைவனோ, அத்தன்மையாக கற்புடையபெண் தன் கணவனுக்கேதாவது துன்பம், துயரம், கெடுதி, பாபம், அபவாதம், முதலியவை யேற்படக் கண்டால், அவ்வச்சமயத்திற் கேற்றபடி யோசித்து, மணாளன் மனத்திற்கு உற்சாக முண்டாக்கிக்கொண்டும், அறிவிலியாயின், எற்றபடி அறிவுறுத்திக்கொண்டும் இருப்பள்.

இதற்கு உதாரணமாக ஓர் இதிகாசம். அதாவது:—

கொழுநன் சொற்கடவாதுறை கொள்கையே
வழுவில் நல்லறம் வான்றவ மாற்றுதல்
தொழுது தெய்வம் பராய்மலர் தூவுதல்
பழுதில் கற்புடைப் பத்தினிக் கென்பவே.

என்னும் வாக்கியத்தைத் தனக்குரைத்ததாக எண்ணி ஒழுகும் மமதாதேவியென்னும் மாது, தன் கணவனாகிய தனசிதாசரிஷ்டப்படியிருந்து, மாமியின் வார்த்தையாலும், அக்பர் பாதுஷாவின் அழைப்பினாலும், பாலும் நீரும்போலுயிருந்த இருவரும் பிரிக்கப்பட்டுத் தனசிதாசர் பாதுஷாவையும், மமதாதேவி தன்தாய்வீட்டையு மடைந்திருக்கையில், விலாட்சமிர்த்து தனசிதாசர் பாது

ஷாவைநீங்கி மனையைநாடி மமதா தேவியைத்தேடி காணாமல்வாடி, பெருமழை பொழிவதையும் கவனியாது, இடிமின்னலுடன் இருளாயிருக்கு மவ்விரவில் அச்சமின்றி ஆசையாலுழன்று மாமனார்வீட்டையடைந்து மதில்கள் மூடப்பட்டிருப்பதற்கிடைந்து, மனையாண்மேற் காதலாகித் தவித்து பலவாறாய்க் கூவிச் சுற்றிச் சுற்றிப் பார்க்கையில், மின்னலிலொளியால், மாடியின் சாளரம்முதல் பூமிவரையில் நீண்டு தொங்கிக்கொண்டிருந்த பாம்பு, பழுதையைப்போற் றோன்ற “ காமாதுராணாம் நபயம் நலஜ்ஜா ” என்றபடி அதைப்பற்றி யுட்சென்று, சதியை யழைக்கத் தூக்கநீங்கிய மனைவி மணாளனைக் கண்டாச்சரியமுற்று பணிந்தெழுந்து, சுவாமி! எங்கிருந்து வருகின்றீர்? எவ்வழியாய் இம்மாளிகையை யடைந்தீரெனப் பணிவாய்ப் பகரும்போது, தாசர் தான்வந்த வழியைக் காட்ட, அதுகண்டு பாம்பெனப் பயந்து திகைத்து, ஆஹா! என்மீதெவ்வளவு பற்றிருந்தால் இச்சட்செவி இவருக்குக் கயிற்றைப்போற் றோன்றியிருக்கும், ஐயையோ! அனியாயமாய்ப் இப்புன்புலால் யாக்கைமே லிச்சையூன்றி அளவு கடந்த பேரின்பத்தை அவமதிக்கிறாரே; ஐயோ! தான் கற்ற வேதாகமங்களெல்லாம் இப்பாவியின் முன்னிலையில் தன்மனத்திற் றங்காமற்றவிக்கின்றதே! இதனா லனேக ஜன்மமெடுத்து நமது பதி துன்பமடைய நேரிடுமே! மானுடப்பிறவியோ அரியதே! இதுபோனால் இனி யெப்பிறவி வாய்க்குமோ! வேறு எச்சென்மம் வரினும் ஆன்மஞானம் சித்திக்குமா! சித்தியாதே! ஐயோ தெய்வமே! என் பதிக்கு இத்தகைய சதியும் வாய்க்குமோ; எனப்பலவாறாய்ச் சிந்தித்து, முடிவில் சுவாமி? இப்பாவியேனது ஆக்கையிற் சுகமிருப்பதாக வெண்ணியன்றோ அரவத்தைக் கயிறெனமதிக்கும்படியாயிற்று. ஆஹா! ஜீவர்கள் ஆசையென்னும் பைசாசத்தாற் பீடிக்கப்பட்டன்றோ, சச்சிதானந்தமயமான பரமாத்மாவை, அனுர்த ஜடதுக்கமயமான உலகமென மதிக்கிறார்கள். தான்யார்? உலகமென்பதியாது? என ஏகாந்தமா யிருந்து சிந்திக்குங்கால், நாமரூபங்களற்று சுயம்பிரகாசமாய் விளங்குமன்றோ? தன்னை மறந்திருப்பதனாலன்றோ, உலகம் பலவாறாய்த் தோன்றுகின்றது. “ நிஸ்ப்ருஹஸ்யத்ருணம் ஜகத் ” என்றபடி, ஆசையற்றவனுக்கு உலகம் அணுமாத்திரமல்லவோ? விரித்துச் சொல்லவோ, ஓ, ஸ்வாமி! தமது ஆசைக்குக் காரணமாயுள்ள இவ்வுடலைப்பற்றி ஆராயின், இவ்வாக்கை,

“ அமேத்யபூர்ணம் க்ருமிஜால ஸங்குலம், ஸ்வபாவதுர்க்கந்தம சௌசமத்ருவம்
களேபரம் மூத்ரபுரீஷ பாஜனம், ரமந்திமூடா: நரமந்தி பண்டிதா:

அதாவது:—மலத்தால் நிறைந்ததும், புழுக்கூட்டம் நிறைந்ததும், இயற்கையிலேயே துர்நாற்றமுள்ளதும், சுத்தமில்லாததும், அழியத்தக்கதும், பிணத்திற்கொப்பானதும் மலமூத்திரங்களுக்குப் பாத்திரமாயேயுமான, இவ்வுடலைக் கண்டு, கண்டதேகாட்சி, கொண்டதேகோலம், மரணமேமுத்தி, மறுஜன்மம் நாஸ்தி யென்றுள்ள அவிவேகிகளன்றோ ரமிப்பார்கள். சகல கலைகளையுங்கற்று, மந்திரித்தொழிலிலமர்ந்திருந்து, ஆத்மாராமென்னும் ஞானியைப் பிதாவாக வுடை ரும், மகா விவேகமுடையவருமாகிய தாங்கள், இதை யொரு லக்ஷியம் செய்யப்போமா? ஆயினும் தாங்க ளெப்படி பிரமித்திருக்கமாட்டீர், ஏதோ என் மனதைச் சோதிக்கவெண்ணி யிப்படி நடிக்கின்றீரோ? அல்லது மாயனது மாயை மயக்குகின்றதோ? இவ்வுடலைநம்பி இவ்வளவு விபரீதங்கள் செய்யப்போமா? இது அனந்த ஜன்மங்களுக்கேதுவாகுமன்றோ? “ஜன்மது: கம் ஜராது: கம் ஜாயாது: கம்புன: புன ஸம்ஸாரஸாகரம் து: கம்தஸ்மாத் ஜாக்ரதோ ஜாக்ரத: ” என ஆன்றோர் அறைந்திருக்கவில்லையா? தாங்களறியாத கல்வியா? ஓயென் பிராணவல்லபா! இப்பாவியேன்மேலுள்ள பற்றெல்லாம்

ஒருங்குசேர்த்து பரமாத்மாவிடம்வைத்தால் பேரின்பமடையலாமே, அதனாற் பிறவித்துன்ப மொழிந்துபோமே! யெனப் பலவாறான பக்திஞானமார்க்கங்களை விரிவாயெடுத்துரைத்துந் துளசிதாஸரின் மயக்கத்தையறுக்க; பத்தி வைராக்யாதி சாதனங்களாற் றுளசிதாசர் ஞானத்தைப் பெற்று பேரின்பக் கடலில் மூழ்கினார்.

இன்னும், ரூபேச லக்ஷ்மீ

அழகில் மகாலக்ஷ்மியைப்போலும்,

> கொழுநன் உண்டபின் றானுணுங் கொள்கையும்
> விழி துயின்றபின் துஞ்சலு மென்றுயில்
> எழுதன் முன்னம் எழுதலுமே யன்றோ
> பழுதில் கற்புடைப் பாவையர் செய்கையே.

என்னும் முதுமொழியை யனுசரித்தும், அகத்தை யலங்கரித்து, தனக்கேற்பட்ட தூய்மையுடன், லலாடத்தில் திலத குங்குமங்களில் ஏதாவதொன்றிட்டு விலக்ஷணமுகத்துட னிருத்தல் ஆகும்.

" க்ஷமயா தரித்ரீ. "

பிராணிகளால் எவ்வளவு நியாயாந்நியாயங்கள், துஷ்கிருத்தியங்க ளேற்பட்டாலும் அவற்றையெல்லாம் பொறுத்துக்கொண்டு அப்பிராணிகளைச் சுமக்கின்ற பூமியைப்போல, பதிவிரதை கணவனாலாவது, மக்களாலாவது, மற்றவராலாவது அறியாமையாற் செய்யப்படுங் கொடுமைகளைத்தான் பொறுத்துக் கொள்ளவேண்டும். இதை விளக்கச் சுருக்கமாக ஒருதாரணம் கூறுவாம். அதாவது:—27-மக்களைப்பெற்று இன்னலின்றி இறையைத் தியானிக்கும் குசேலரது பத்னியாகிய சுசீலையென்னும் பெண்மணி தன்பதியினால் தேடித்தரப்பட்ட அரிசியைப் பாகஞ்செய்து அதிதிக்கும், ஆப்தருக்கும் பங்கிட்டு மக்களுக்கு வார்க்குங்கால் அம்மக்கள் ஒருநாளாயினும் வயிறாரக் கூழருந்தியதில்லையாதலால், கூழ்வெறியும் பசியும், அதிகரித்தவர்களாகி,

> ஒருமகவுக்கு அளித்திடும்போது ஒருமகவு கைநீட்டும் முந்திமேல் வீழ்ந்து
> இருமகவுங் கைநீட்டும் மும்மகவும் கைநீட்டும் என்செய்வாளால்
> பொருமி ஒருமகவழுங் கண்பிசைந்தழும் மற்றொருமகவு புரண்டுவீழாப்
> பெருநிலத்திற் கிடந்தழும் மற்றொருமகவு மெங்ஙனம் சகிப்பாள் பெரிதாம்பாவம்

இதுமாத்திரமன்று, இன்னும்

> அந்தோ வென்வயிற்றெழுந்த பசியடங்கிற்றில்லையென வழுமால் ஒருசேய்
> சிந்தாதகஞ்சி வார்க்கிலையெனக்கு அன்னாய் எனப் பொய்செப்பும் ஒருசேய்
> முந்து ஆர்வத்து ஒருசேய் மிசையப்புகும்போதினி லொருசேய் முடுகியீர்ப்ப
> நிந்தாமற்று அச்சேயுங் எதிரீர்ப்பச் சிந்துதற்கு யெக்கும் ஒருசேய்.

இவ்வாறு தமது பசிக்கொடுமையாற் சகிக்கமுடியாமற்செய்யும் அம்மக்களின் செயல்கட்கு மனங்கோணாது, ஐயோ என்னசெய்வது, இக்கொற்ற வறுமைத்தி நம்மைச்சூழ எதுதீவினைவிளைத்தோமோ எனத்துயரடைந்திருக்கும்போது, அம்மக்கள், வெளியிற்சென்று திரிந்து,

> மேறுமனைச் சிறுன் அயின்ற பக்ஷணங்கண்டோடிவந்து விழிநீர் வாரச்
> சேறுதலிலாத அன்னைமுக நோக்கி இன்னான் இன்னதின்றான் என்வாய்
> ஊறுவதால் இப்போதே செய்தளித்தியென உடுத்த உடை தொட்டீர்க்கும்
> தேறுதல் இல்மகவையெடுத்து மார்பிடையணைத்துச் சிந்தை நோவாள்.

அன்பர்காள்! உலகத்தில் சாமான்யருக்கும் இத்தகைய பொறுமை யேற்படுமோ? சாமான்ய ஸ்திரீகளாயின், இத்துன்பங்கட்குச் சகியாராகி, கணவனைக்கண்டோ, காணாமலோ, தாபங்கொள்ளலும், தூஷித்தலும், ஏற்படுமன்றோ? சுசீலாவோ, இவ்வளவு அவஸ்தையிலும், தன்கஷ்டங்களைத் திடமென்று தெரிவிக்கவில்லையென்றால் அன்னாளது பொறுமையை என்னவென்றியம்பலாம்? தான் உணவும் இன்றி பன்னாளாகப்பட்டினியிருந்து, மக்களின் துன்பத்தைப் பார்க்கச் சகியாதவளாய், இது கணவனிடத்திற் கட்டுரைத்தாற்றான் தீரும், இன்றேல் மக்கள் மடிவதே நேரும் என்றுன்னி, சின்னாட்களை யெதிர்நோக்கி ஓர்நாளில் அன்பும், அடக்கமும், அச்சமும் தன்னைச்சூழ, கணவனடிபணிந்து கழன்ற மொழிகளை யென்னென்றுரைக்குதும் பக்திவினயங்களாலலங்கரிக்கப் பெற்றுள்ள, சுசீலாவின் அச்சமயத்து மொழிகளை அன்னார் சரித்திரத்தைக் கண்ணுற்ற புண்ணியரே யறிவர்.

விஷயம் இவ்விதமாக ஒன்றைப்பற்றி யொன்றுவிரியும் அதனாற் சஞ்சிகையு மிடங்கொடாதென்றஞ்சி மேல்விஷயத்தை ஒருவாறு சுருக்கி முடிக்கின்றனன்.

"போஷ் யேஷு மாதா"

மக்களின் தன்மையையறிந்து அன்னமிடத்தக்கவள் அன்னையேயாகும். இதனாலேயே தாயற்ற மக்களுக்குத் தக்க வுணவு கிடைப்பதரிது என்பதை விளக்க 'தாயோடறுசுவைபோம்' என்னும் முதுமொழியு மேற்பட்டது. தாய்க்குப் பின் தாரம் என்றபடி உணவை யூட்டுந் திறமையில் மனைவியே பெற்ற அன்னையைப் போன்றவளெனவும்.

"ஸயனேஷு வேஸ்யா"

பள்ளியறையில் விலைமாதைப்போன்ற நடிப்புடனிருத்தல், ஆகிய இவ்வாறுவித குணமும் பொருந்திய மடந்தையைக் குலத்திற்குகந்த பத்தினியெனச் சாத்திரங்கள் சாற்றுகின்றன. ஒருவருடைய ஸ்திரீ இக்குணங்களை யனுசரித்தொழுகத் தலைப்பட்டால் அன்னார் மகிமை மிகவுன்னதமானதாகும். விரகங்கொண்ட வேடன் தமயந்தியாலெரிந்ததும், தீயாறு சந்திரமதியால் நீராகியதும், கள்ளர்கள் கண்ணகியாலசைவற்றுநின்றதும், வியக்கத்தக்க காரியங்களன்றோ? இன்னும், மரித்த மணாளனை உயிர்ப்பித்த சாவித்திரியின் கற்பை யென்னென்றுரைக்குதும்! ஆஹா! கற்பரசிகட்குக் கைகூடாத காரியமும் ஒன்றுண்டோ? தெய்வப்புலமைத் திருவள்ளுவரும்,

'தெய்வந் தொழாஅன் கொழுநற் றொழுதெழுவான்
பெய்யெனப் பெய்யும் மழை'

எனப்பகர்ந்தனர் பலவாறென்? திரிமூர்த்திகளும் அனசூயா தேவியின் மகிமையால் குழவிகளாயினரெனின், கற்பின் பிரபாவத்தை யெவ்வளவென்று வரையறுத்துரைக்க முடியும்? அசாத்தியம்; இவ்விஷயத்தைப் புராணேதிகாசங்களிற் கண்டறிந்த அன்பர் *பலர் திரிமூர்த்திகளின்மேல் குற்றஞ்சாற்றிக் கும்பிடத் தெய்வமின்றி குருட்டு வழியாய் மதப் பிரஷ்டர்களாவது பேதைமைமாகும்; ஐயறிவும் கூடியுள்ள மானுட ஜன்மத்தை யடைந்த ஜீவர்கள் பல்வேறு தொழில்களால் பல்வேறு வேற்றுமைகளை யடைந்திருப்பதோடு தத்

---

* அந்தோ! இது நமது பிள்ளைகளுக்கு நம் மதக்கல்வியைப் போதிக்காத குற்றத்தால் நேர்வதேயாகும். அறிவுடையோர் இக்குற்றத்தைச் சீக்கிரம் நீக்க முயல்வார்கள்.
பத்திராசிரியர்.

தம், தர்மகர்மங்களைக் குன்று முயற்சியா யனுஷ்டித்தா லன்றி முக்தி யெளி தன்று, என்று ஏற்படுத்திய ஈசன், அவ்வேற்பாட்டையறிவுறுத்தும் பொருட்டு திரிமூர்த்தி ஸ்வரூபமாகவும், பல அவதாரங்களைக் கொண்டும், அனுஷ்டித்துக் காட்டிக்கொண்டுமிருக்கிறார். ஒவ்வொரு தர்மத்தின் உயர்வையும் அப்போதைக் கப்போது விளக்கிக்கொண்டு மிருக்கிறார். பக்தியே மேன்மை யென்பதைத் திருஷ்டாந்தப் படுத்தும் பொருட்டு, அப்பக்தி யோகத்தாராகிய மகான்களுக்கு பல பல விதமான காரணங்களை முன்னிட்டு ஊழியமும் செய்யத் தலைப்படுகிறார். இப்படி ஒவ்வொரு தர்மத்திலு மிவ்விதமே. பகவத்கீதையில் உள்ள கருத்தும் அதற்கேற்ற படி பக்தவிஜயத்திலும், பாகவதத்திலும் உள்ள சரிதைகளையும் கண்ணுறில் தெளிவாய் விளங்கும், அத்தகைய எம்பெருமான் கற்பின் மகிமையை அளவிட முடியாதென்பதை அனசூயாதேவியின் மூலமாய் உலகத்திற்கு விளக்கிக் காட்டினார். நிற்க, ஸ்திரீகளுக்குக் கல்வி இன்றியமையாதது. கல்வி யுண்டானால் சாஸ்திர ஆராய்ச்சிசெய்யவும், அதனால் புத்திக் கூர்மையும், தீர்க்க யோசனையும், உண்டாகி யுக்தா யுக்தங்களைச் செவ்வனே அறிந்து நமக்கென்ன விதி ஆடவர்க்கென்னவிதி எனப்பகுத்தறிந்து ஆடவரெத்தகையரேனும், தத்தம் விதிக்கு வழுவின்றி நடப்பார்கள். முற்காலத்துக் கற்பரசிகளின் தன்மைகளையும் ஊகித்தறிந்தொழுகுவார்கள். அதனால் உளக்களிப்பும், புகழும், தெய்வகடாக்ஷமும், முடிவிற் சாயுச்சியமும் அடைவார்கள். அது வன்றி உலகமும் தெளிவடைந்து செழிக்கும்; ஆதலால், ஆண்களைவிடப் பெண்களுக்கு சாஸ்திர ஆராய்ச்சிக்குத் தக்க கல்வி அத்தியாவசியமானது என்பதை யுணர்ந்து பெற்றோர் தத்தம பெண் பிள்ளைகளுக்கும கல்விச் செல்வத்தைச் சீதனமாய்க் கொடுப்பார்களாக. அம்மகளிரும் தமக்குண்டாகும் மேன்மைக்கு ஆதாரம் ஈதெனக் கல்வி கற்பார்களாக. சுபம்.

ஸ்ரீ சச்சிதானந்த ஸ்வரூபாய நம:

ஆ. இராமசாமய்யர்.

---

## நித்தியவிதி—ஜபம்.

### பிராணாயாமம்.

நாமிப்பொழுது எழுதத்தொடங்கியது "ஜபம்" என்ற விஷயமாயினும், வைதிககருமங்கள் எல்லாவற்றுக்கும் பிராணாயாமம் அங்கமாய்ச் சிறந்திருக்கின்றதாதலால் பிராணாயாமம் செய்யாமல் எவ்விதமான கருமமும் விதிக்கப்படவில்லை. ஸ்மிருதிபுராண இதிகாசங்களும், கற்பசூத்திரங்களும் கர்மாரம்பத்தில் பிராணாயாமத்தை விதிக்கின்றன. அந்தணர் ஜபிக்கத்தக்க காயத்திரி ஜபத்திலும் முதலிற் பிராணாயாமத்தைச் செய்தபின்னரே காயத்திரியை ஜபிக்கும்படி விதி கூறப்பட்டுள்ளது. பஞ்சாட்சர அஷ்டாக்ஷர ஜபாரம்பத்திலும் அவசியம் பிராணாயாமஞ் செய்யும்படி விதி கூறப்பட்டிருக்கிறது. பல கூறுவதிற் பயனில்லை. ஜபதாபாதி சகல கிரியைகளும் பிராணாயாமமின்றி நடைபெறுமாறில்லை. இந்தப் பிராணாயாமம் ஆரியர்களுக்குச் சர்வ சிலாக்கியமுடையதென்று சொன்னப்படுகிறது. ஆதலின் ஜபத்துக்கு முதலங்கமாகச் சிறந்து நிற்கும் அந்தப் பிராணாயாமத்தைச் சிறிது கூறியபின் மேலே செல்வாம்.

"பிராணாயாமம்" என்றால் பிராணவாயுவை உள்ளடக்குதல் என்பது பொருள். அதனால் பிராணாயாமத்தினாலாகும் பயன் பிராணவாயுவை வெளியிற் செல்லாமல் உள்ளடக்குவதே யாம். அவ்வளவேயாயின் இது ஜபத்துக்கு அங்கமாயிருந்து எப்பயன் அளிப்பது எவ்வாறெனின், "வாயுநிற்க மனமுமுட

னிற்கும், நோயகிற்குறினிற்கும் அரும்புமே" என்ற பிரமாணவசனத்தால் பிராணவாயு அடங்கியிருக்கவே மனமும் தன் செயலற்று அடங்கியிருக்கும். மனமடங்கவே புலன்கள் புறவிடயங்களைக் கவரா. அப்போது ஒருபொருளையே பற்றி நிற்குமியல்புள்ள மனம் தனக்குப் பற்றுக்கோடில்லாமையால் அகத்துட் குறிக்கப்படும் பரம்பொருளைப்பற்றி நிற்கும். இவ்வாறு மனம் பிரமப்பொருளைப்பற்றி நிற்பதையே யோகமென்று பெரியோர் கூறுகின்றனர். ஆகவாற் பிராணாயாமத்திற் பயின்று சித்தியடைந்த பெரியோரே யோகியரென்று புகழப் படுகிறார்கள்.

அன்றியும் மனிதர் விரும்பத்தக்கது தீர்க்காயுசு. ஆயுசில்லாதபோது மற்றெவ்வகைப் பயன்களிருந்தும் பயன்படுமாறில்லை. "தானில்லாதபோது மற்றவை யிருந்தாலதென்ன?" என்று வைத்தியநூலில் கூறப்பட்டது. யோகிகளும், வைத்தியர்களும் அதிக சுவாசம் செலவழியாதிருப்பதே ஆயுள் விருத்திக்காதாரமாமென்று நிச்சயித்துரைத்தனர். உலகத்தார் சாந்திரமானப்படி முந்நூற்றறுபது நாட்களை ஒரு வருஷமாகவும், ஸௌரமானப்படி முந்நூற்றறுபத்தைந்து நாட்களை ஒரு வருஷமென்றும் கொண்டு, அவ்வருஷம் நூறுகொண்டது ஒரு புருஷாயுசு என்பர். யோகிகள் சூரியோதயாஸ்தமான காலங்களையே நாட்களாகக்கொண்டு ஆயுசைக் கணக்கிடுவதில்லை. இருபத்தோராயிரத் தறுநூறு சுவாசத்தையே ஒருநாளென்று கணக்கிடுவார்கள். அதனால் சுவாசம் எவ்வளவு செலவழியாமற் காப்பாற்றப்படுகின்றதோ அவ்வளவு ஆயுசின் விருத்தியேயாம். அந்தணரியற்றவேண்டிய நினகர்மங்களைச் சரிவரச்செய்யும் அவ்வந்தணனுக்கு நூறுபிராணாயாமங்கள் ஆகும். நூறுபிராணாயாமங்களுக்கும் 20⅓-விநாடியாம். இதனால் நித்தியகர்மத்தைக் குறைவற நிறைவேற்றும் அந்தணன் மூன்று நாட்களில் ஒருநாளாயுசை விருத்தியாக்கிக் கொள்ளுகிறான். அவ்வாறின்றி யோகத்திலிருந்து பலநாள் சுவாசத்தை அடக்கியிருக்கும் பெரியோர்கள் எத்தனைநாள் யோகத்திலடங்கி யிருக்கிறார்களோ அவ்வளவு நாட்களும் ஆயுசின் அதிகமேயாம். இவ்வாறே பூர்வகாலத்திருந்த தபோதனர்கள் வருஷக்கணக்காக யோகத்தி லடங்கியிருந்து யிருத்தியுகங்களையும் கடந்து அநேக கற்பகாலங்களையும் கண்டதாக நூல்கள் கூறுகின்றன. இத்தகையயோகிகள் உடலுடன் கூடியிருக்கும்போதே இந்திரலோகம், சந்திரலோகம், சூரியலோகம், எமலோகம் முதலிய வுலகங்களுக்குப்போய் மீண்டுவந்ததாகவும் கூறுகின்றன. அணிமாதி அஷ்டசித்திகளையும் பெற்றாரென்றும் கூறுகின்றன. பரகாயப் பிரவேசம் முதலிய மகிமைகளும் இதனாற் பெற்றார்களாம். ஆகவாற் பிராணாயாமத்தின் மகிமைகள் அளவிலடங்காவாம்.

இதனை நமது ஆசிரியர்களே கண்டுபிடித்துப் பெரும்பயனை அடைந்தார்கள். வேறு எத்தேசத்தாராலும் கண்டறியப்படாத கற்பம்போன்றது. தன்னை முறைதவறாம லநுஷ்டிப்பவனைத் தேவனாகவும், தேவனுக்கு மேலாகவுமாக்கவல்லது. குப்பையுண்மாணிக்கம்போலத் தத்துவக் காட்டினுள் மறைந்து நிற்கும் ஆன்மாவின் இயற்கைத்தன்மையை விளக்கிக்காட்டுந் தகையது. ஆஸ்திகநாஸ்திகர்களால் "உண்டு," "இல்லை" என்று வழக்கிடும்படி எங்கும் நிறைந்து ஒருவராலும் உணரப்படாத பதிப்பொருளை உள்ளங்கை நெல்லிக்கனிபோல உள்ளுக்குள்ளே உணர்த்தவல்லது. இருந்தவிடத்தில் நின்றே சர்வாண்டங்களிலும் நிகழ்ந்தவை, நிகழ்கின்றவை, நிகழப்போகுமவை எல்லாவற்றையும் கண்டறியத்தக்க நிர்மல மெய்ஞ்ஞானத்தை யளிக்கவல்லது. சர்வகர்ம சித்திகளையும், மந்திர சித்திகளையும் கொடுக்கவல்லது. இத்தகைய பிராணாயாமத்தை ஜபம் செய்யும் முன் அநுஷ்டித்துப் பின்னர் ஜபித்தால் சித்தியுண்டாகும்.

இந்தப் பிராணுயாமம் வைதிகநூல்களில் துவிஜர்களுக்கே விதிக்கப்பட்டது. ஆயினும் ஆகமங்களில் எல்லாரும் அனுஷ்டிக்கலாமென்கிற கட்டளையுண்டு, ஆகமங்களும் வேதத்தைப்போலவே, சர்வஜீவான்மாக்களின் க்ஷேமத்தைக் கருதிச் சர்வேசுவரனால் அளிக்கப்பட்டதாகையால் எல்லாரும் தத்தம் சக்திக்கியன்றமட்டில் அனுஷ்டிக்கலாம். இந்தப் பிராணுயாமம் "சகற்பம்" எனவும் "அகற்பம்" எனவும் இருவகைப்படும். இவற்றுள் சகற்பம் என்பது மந்திர உச்சாரணத்துடன் கூடியது. இம்மந்திரம் ஏழு வியாகிருதிகளையும் முதலில் வைத்து, நடுவில் காயத்திரி மஹாமந்திரத்தையும் கடையில் காயத்திரி சிரசு என்கிற மந்திரத்தையும் சேர்த்து ஜபிக்கும்படி அந்தணர்களுக்கு விதிக்கப்பட்டது. மற்றைய வருணத்தாருக்குத் தம்வழிபாடுகளைக் குறித்த மந்திரமே மந்திரமாம். அன்றியும் ஆசிரியனுபதேசிக்கும் எந்த மந்திரமுமாம். ஆதலால் இம்மந்திரம் குருமுகத்தால் அடைந்து ஜபிக்கத்தக்கது. இது அகற்பத்தைப் போல அவ்வளவு சிறப்புடையதல்லவாயினும் அகற்பப்பிராணுயாம சித்திக்கு இதுவே காரணமாய் நிற்றலால் மிக்க பிரயோசனம் தரத்தக்கதே. இந்தப் பிராணுயாமத்தால் உள்ளிருந்த துர்மலங்கள் சுவாசத்தின்வழியே வெளிப்பட்டுப்போய்விடும். அப்போது இருதயகமலம் பரிசுத்தமாயிருக்கும். அச்சமயம் மந்திரார்த்தமாகிய பரம்பொருளை மனம் தியானிக்க, வாக்குமந்திர அட்சரங்களை யுச்சரிக்கக் காயம் பிராணனைத் தடுத்து நிறுத்தக் கண்கள் நாசி நுனியைநோக்கிநிற்க நேரிடுமாதலால் திரிகரணங்களும் ஒருங்குசேர்ந்து நிற்கும் பாக்கியம் உண்டாகும். திரிகரணங்களும் ஒன்றுபட்டு நிற்பதே பிரமதரிசன மூலமாதலால் அதன் பெருமை யளவிலடங்காது. இப்படிப் பிராணவாயுவைத்தடுத்து முக்கரணங்களையு மொருங்கு சேர்த்துத் தெய்வத்தியானம் செய்யும் புண்ணியசீலர்கள் காலாந்தரத்தில் அகற்பப் பிராணுயாமசித்தியைப்பெற்று, எங்கும்நிறைந்துள்ள ஏகபிரம்மத்துடன்கலந்து ஜீவன் முத்தியையும், பின் விதேகமுத்தியையும் பெறுவார்கள். இவ்வாறு சகற்பப்பிராணுயாம முறையை அனுஷ்டித்து ஜகதீசுவரனுடைய திருமேனியைத் தியானம்செய்யும் முறைமை ஸ்ரீபாஞ்சராத்திராகமத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. சொரூபதியானத்துடன் கூடியிருத்தலால் இது எல்லாராலும் செய்யக்கூடியது. இனி அகற்பத்தைக் கவனிப்போம்.

அகற்பத்தையே யோகிகளும் யோகநூல்களும் புகழ்ந்துகூறுவது. சகற்பப் பிராணுயாமம் பன்னிரண்டு அல்லது பதினாறு மாத்திரையளவு குறிக்கப்பட்டது. சிலநூல்களில் இருபத்துநான்கு மாத்திரையளவும் கூறப்பட்டது. அகற்பத்துக்கோ எல்லையேயில்லை. ஒருமஹாயுகமளவும் ஒரு பிராணுயாமத்தைச் செய்யலாமென்று நூல்கள் கூறுகின்றன. இதை யனுஷ்டிக்கும் யோகிகளே பலகற்பங்கள்வரைக்கும் அழியாமலிருந்தார்கள் என்று நூல்கள் புகழ்ந்துகூறின. இக்காலத்திலும் மூன்றுநாள் ஐந்துநாள்மட்டும் ஒரேபிராணுயாமஞ் செய்கிற மஹாத்மாக்களைத் தென்னாட்டில் காணலாகும். இதுகொண்டே வெகுகால மனுஷ்டிப்பவர்களு மிருக்கலாமென்று உயர்த்தறிந்து கொள்ளலாம். இந்தப் பிராணுயாமத்தில் இரேசகம், பூரகம், கும்பகமென்று மூன்று வேற்றுமையுண்டு.

இரேசகம் என்பது உட்சென்ற பிராணவாயுவை மெதுவாக வெளிப்படுத்துவது. பூரகம் என்பது பிராணவாயுவை நாசித்துவாரத்தின்வழியாக உட்செலுத்துவது. கும்பகமென்பது பூரணகும்பத்தில் நீர் நிறைந்து நிற்பதுபோலச் சரீரத்துட் பிராணவாயு நிறைந்து நிற்கும்படிசெய்வது. உள்ளிருக்கும் வாயுவை வெளியில் ரேசிப்பதினால் உள்ளிருக்கும் அசுத்தம் வெளிப்பட்டுப்போகும். இது சாதாரணம் குவிந்து கவிழ்ந்திருக்கும் இதயதாமரை நிமிர்ந்து மலர்ந்துநிற்கும்

என்று யோகசாஸ்திரங்கள் கூறுகின்றன. "இருதயம் தாமரை மொட்டைப் போலக் கீழ்நோக்கியிருக்கும்" என்று வேதம் கூறிற்று. அதற்குக் குவிதலுக்கும் விரிதலுக்கும் தக்கசக்தி ஈசனால் அமைக்கப்பட்டுள்ளது. இரேசகத்தால் விரிதலும், பூரகத்தால் குவிதலுமாம். இதனால் மலம் வெளிப்படுதலும் இரத்தம் சுத்தமாதலுமுண்டாம். கும்பகத்தினால் சுத்தமான இரத்தம் மூளையின் ஸ்தானத்தையடையும். அந்த மூளையே பிரமஸ்தானம் அறிவுஸ்தானம் என்று கூறப்படும். அதில் சுத்த இரத்தம் பிரவேசித்தால் அந்த ஸ்தானம் சுத்தமாய்ப் பிரகாசிக்கும். அப்பொழுது அதைச் சார்ந்திருக்கும் மனமும் பரிசுத்தமாய் விளங்கும். புத்தி களங்கமற்றுநிற்கும். உள்மலமொழியும் ஆயுள் விருத்தியாகும். சரீரம் நிர்மலமாம். புலன்கள் நற்பொருள்களைக் கவரும் வலிபெறும்.

இரேசகபூரகங்களை இரண்டு நாசித்துவாரங்களாலும் மாறிமாறிச் செய்யவேண்டும். ரேசகபூரகங்களின் அளவுகாலம் எல்லாருக்கும் ஒரேமாதிரியாகவிருக்கும். கும்பகம் அவ்வாறின்று. யோகாப்பியாசியின் சரீர சக்தியைப் பொறுத்தது. அறுபத்தாறு விநாடிமுதலில் அநேகநாழிகைவரை அல்லது அநேகநாள்வரையும் செய்யக்கூடும். இந்தக் கும்பகமே ஆயுளை விருத்தியாக்குவது. இதனால் மூலாக்கினி மூண்டெரியும். அதனால் சுழுமுனைநாடியின் அடியில் பாம்பின் வடிவாயமர்ந்திருக்கும் குண்டலிசத்திநின்று பிராணவாயுவை அந்நாடியுட்புகாமல் தடுத்துக்கொண்டிருக்கும். மூலாக்கினி மூளுதலால் குண்டலி அவ்விடம்விட்டுப் பெயரும். பெயரவே பிராணவாயு சுழுமுனை நாடியினுட்பிரவேசிக்கும். இந்த நாடியே பிரமரந்திரம் மோட்சமார்க்கமென்று நூல்களாற் புகழ்ந்து கூறப்படுவது. அந்நாடிக்குட்சீவன் பிரவேசித்தால் அச்சீவனுக்கு மரணபயமில்லை. எமன் அவ்விடம் அணுகான். அதுவே அமிர்தமார்க்கமாம். அவ்வழிசென்ற ஜீவன் துவாதசாந்தஸ்தானத்தில் விளங்கும் பரசிவத்தை அடைந்து அமிர்தமயமாய்என்றுமழியாதநிலையைப்பெறும். இரேசகபூரகங்களையும் பாங்கமாகக்கொண்ட இந்தக்கும்பகமே பிராணாயாமம் என்பதுமாம். இதுவே யோகசித்தியுமாம். இதனால் சரீரம் அமிர்தமயமாகும். சகலகருவிகரணங்களும் அமிருதமயமாய் நிர்மலமாய் ஒளிவீசிநிற்கப் பிரமசொரூபம் வெளிப்படும். இதை நெடுநாள் அப்பியசித்துச் சித்திபெறவேண்டும். இந்த அகற்பத்தின் விரிவு யோகநூல் வைத்தியநூல்களிலும், புராணஇதிகாச ஸ்மிருதிகளிலும் உபநிஷத்துகளிலும் நன்குவிளக்கப்படும். இந்த யோகசித்தி யடைந்தவருக்குச் சகல மந்திரசித்திகளும் உண்டாகும். இவ்வகற்பம் குறியின்றிக் குறிக்கப்படுதலால் எல்லாருக்கும் சாத்தியமாகாது. ஆதலால் சகற்பவிதிப்படி பிராணாயாமம் செய்து மந்திர ஜபம்செய்யவேண்டும். அதுசெய்யாவிடில் மனம் நிலைபெறாது. களங்கமறாது. அதனால் மந்திரசித்தியாகாது. ஆகையால் சற்குருவின் சரணாரவிந்த சேவைசெய்து பிராணாயாமவிதியை உணர்ந்துகொண்டு அவ்வழிநின்று மந்திரசித்தி செய்துகொள்வதே சன்மார்க்கமாம்.

குறிப்பு.—ஆடிமீ° வெளிவந்த ஆனந்தனில் ஓர்வேண்டுகோள் என்று எழுதியிருந்த விஷயத்தைக் கண்ணுற்றோம். வைதிகநெறியை வேப்பங்கனியை யொப்ப வெறுத்தொதுக்கு மிக்காலத்திலும் வைதிகவிதிகளை உள்ளன்போடும் பேராவலுடனும் விரும்பி யெதிர்பார்த்திருக்கும் மெய்யன்பரும் உளர் என்பதை நோக்க எமதுள்ளம் பூரிக்கின்றது. சிந்தையிலானந்தம் கரைகடந்து பொங்குகின்றன. நித்த மலாபஹார்னஸ்னானாதிகள் நித்தியமானதன்று. ஒருகாரணம்பற்றியே செய்யப்படுவனவாதலால் நித்தியஸ்நானத்திற் சேர்க்கப்படாமல் நைமித்திகம் என்றே சொன்னப்படும். ஆகலின் வேறுபிரித்தே கூறவேண்டும். ஸ்நானம் என்னும் இனஒப்புமைபற்றியே நித்தியஸ்நானத்துடன்சேர்த்து முடிக்கப்பட்

டன. அதுபற்றியே "வேறிடத்தில்கூற அவகாசமின்மையால்" என்றெழுதப்பட்டது. ஆயினும் மவாபஹூர்ஷங்களில் ஒன்றாகிய அப்பியங்கனஸ்நானம் அதிகவிசேஷமுள்ளதாகையால் மேலே சமயம் வரும்போது அவசியம் கூறப்படும். அதுவும் சீக்கிரம் வரும்.

சிவானந்த சாகர யோகீஸ்வரர்.

---

## கற்கோட்டை—நாவல்

(39-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் எங்கேசெல்வது! தன் சகோதரர்களைச் சந்திக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது. அரியநாயகி அவர்களைச் சந்தித்திருப்பாளென்று நம்பக்கூடவில்லை. ஏனெனில் தானும் அவளும் ஓடிவிட்ட சங்கதி வெளியாய்விட்டால் அவளையும் ஆட்கள் தேடிச் சென்றிருப்பார்கள், தன்னைப்போலவே அவளும் தப்பித்துக்கொண்டாளென்று எப்படி நினைப்பது. மேலும் தான் இப்போதிருக்கும் மாறுவேடத்தில் யாராவது தன்னைத் தெரிந்துகொள்வது மிக்க கஷ்டமே. ஆகையால் நகரத்தில் சற்று ஆலசியம் செய்வதில் ஆபத்து நேரிடாதெனத் துணிந்து, தன் சகோதரர்களைச் சந்திக்கவெண்ணி மாரப்பன் காட்டை நோக்கிக் குதிரையை விரைவாய்விட்டார். சற்று நேரத்திற்குள் வெள்ளைக் குடிசையை யடைந்தார். அதன் கதவு பூட்டப்பட்டிருந்தது. சாவி யொளித்து வைக்கப்பட்டிருக்குமிடம் தனக்குத் தெரியுமாதலால், உடனே யதை யெடுத்து கதவைத்திறந்து உள்ளே சென்றுபார்த்தார். அங்கிருந்த குறிகளால் நெடுநேரமாய் அங்கு ஒருவரும் இருந்திருக்க வில்லையென்று தெரிந்தது. உடனே ஒரு சிறு கடிதம் எழுதி சாவியோடு சேர்த்துக்கட்டி கதவைப் பூட்டிக்கொண்டு சாவியை மறைவிடத்தில் வைத்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டார்.

குடிசையைத்தாண்டிக் கொஞ்சதூரம் செல்லும்போது ஒரு பையன் பசக்களை மேய்த்துக்கொண்டு ஒரு மேட்டின்மேல் உட்கார்ந்திருந்தான். பிரபு அவனை நோக்கி,

"சிறுவனே, இங்கு என்னேரமா யிருக்கிறாய்?" என்றார்.

சிறுவன்.—ஏன்! காலத்தாலே இருந்துதான் மாடு மேச்சிகினு இருக்கிறே.

பிரபு.—உயரமான இரண்டுபேர் சுறுத்த உரோமமுடையோர், குதிரைமேல் இவ்வழியே வந்ததைப் பார்த்தாயா?

சிறு.—ஆ! ஆமா ஆமா. அவங்கொ அதோ அந்த மரத்தண்டெதான் சண்டெ போட்டாங்கொ.

பிரபு திடுக்கிட்டு "என்ன? சண்டையா? யாரோடு விவரமாய்க் கூறு பார்ப்போம்" என்றார்.

அதன்மேல் சிறுவன் முதலில் ஒரு அழகிய மாதும் இரண்டு ஆட்களும் நகரப்பக்கமாயிருந்து வந்தார்களென்றும், எதிர்பக்க மிருந்து நான்கு சிப்பாய்கள் வந்து அவர்களை யெதிர்த்து சண்டை தொடங்க, அச்சமயம் மேற்குறித்த இரண்டுபேரும் வந்து அம்மாதின் பக்கம் சேர்ந்து போர்வீரரோடு சண்டை விட்டார்களென்றும், முடிவில் போர்வீரர் தோல்வியடைந்து வந்தவழியே செல்ல, ஸ்திரீயும் அவன் ஆட்களும் அந்த இரண்டு பேரும் ஒரு வழியே சென்றார்களென்றும் கூறினான்.

(தொடரும்.)

ஆரணி—குப்புசாமி முதலியார்.